www.padippakam.com

கடல் : 5 அலை 1

நன்கொடை ரூ. 5/-

# தமிழ்த் தேசம்

திருவள்ளுவர் ஆண்டு 2033 சிலை–கும்பம் கி.பி. திச. 2001 – பிப். 2002. ஆசிரியர் : தியாகு




☆ புதிய ஜனநாயகம் கட்டுரைக்கு மறுப்பு – தியாகு

☆ தமிழீழ விடுதலையும் தமிழ்த் தேச விடுதலையும் – ஏ.ஜி.கே.

☆ கண்ணகி : தமிழ்ப் பண்பாட்டின் அடையாளச் சின்னம் – பெ. மணியரசன்

தமிழ் தமிழர் இயக்கத் திங்களேடு • தனிச்சுற்றுக்கு மட்டும்

www.padippakam.com

# அப்பாவின் கையெழுத்து

வண்டுகடி பூநிற
மதிப்பெண் அட்டை நீட்டி
"கையெழுத்து வாங்கிட்டு வரச்சொன்னாங்க சாரு"
அழுக்குடன் வெய்யிலில் கிடந்ததால்
மடமடத்து நிற்கும்
பாவாடை கசக்கி நிற்பேன்
"எதுக்குத்தா இது... என்ன போட்ருக்காக"
"நான் எவ்ள மார்க் வாங்கிருக்கேனு போட்ருக்காங்க"
"ஆமா... அதாம் நமக்குப் படியளக்கப் போவுது
'கோட்டயில பொம்பொறந்தாலும் போட்ட புள்ளி தப்பாது'னு
எங்குட்டுப் போயி இழுபடப் போவுதோ...
அங்கிட்டு வீசிட்டு ஆவுற சோலிய பாப்பியளா"
கொல்லையிலிருந்து
முள்நறுக்கிக் கொண்டு கத்தும் அம்மா
"நீ கையெழுத்துப் போட்டா... நேரமாயிடும்
'இங்க்' தடவுறேன் ரேக வையுப்பா" பறப்பேன்.
"யாம்... யாம் நான் என்னா கையெழுத்துப் போடத்
தெரியாதவனா... கையெழுத்துப் போட்டுத்தான்
ஓட்டு கூட போட்டன்"
பேனா பிடிப்பார்
கலப்பைபை போல் அழுத்தி...
அட்டை கிழிந்து...
அடிவாங்கும் பயத்தில்
துடிக்கும் மனசு.
உச்சி வெய்யிலில் 'பட்'டென வெடிக்கும்
உளுத்தம் நெத்தாய்
'சடக்'கென முகம் நிமிர்த்தி சந்தேகம் கேட்பார்.
"வழிவிட்டான் 'மயன் சன்னாசி'னு தானத்தா போடனும்"
"வ-போட்டு புள்ளி வச்சி
ஓம் பேர எழுதுப்பா நேரமாவது" பறப்பேன்.
என் அவசரத்தில் தடுமாறி
"அந்த சிலேட்டுப் பலகய எடுத்து
எம்பேர எழுதுத்தா
பாத்து... பாத்து வெரசா எழுதிர்ரேன்"
மாடொன்றைத்
தவற விட்டு வந்து
பண்ணையார் முன்
பயந்தொடுங்கி நிற்கும்
மேய்ப்பவனாய்த் தாழும்
அவர் குரல்
"இதுக்குத்தான் அப்பவே சொன்னேன்
ரேக வையினு" திட்டியபடி...
எழுதி வைக்கும் பெயரைப்
பார்த்து... பார்த்து எழுதிக் கொண்டிருக்கும் போது...
போதாமல் போய் விடும் இடம்.
"அடுத்த கோட்டுல மடிச்சி எழுதவா"
அழுகை வந்து விடும் எனக்கு.
"அடுத்த பரிட்சக்கிதான் அங்க எழுதனும்"
அட்டையைப் பறித்துக் கொண்டு
அவர் பெயரில் குறையும்
ஓரெழுத்தையோ... ரெண்டெழுத்தையோ
மதகில் அமர்ந்து
நானே எழுதி
"போன தடவ மாதிரி எல்லார்ட்டயும் காட்டி...
சொல்லிச் சிரிக்காம இருக்கனுமே
சுப்ரமணிய சாரு"
கவலையோடு நுழைவேன் வகுப்பில்.

* இளம்பிறை *

## மீண்டும் அதே இடத்தில் கண்ணகி சிலை

மீண்டும் அதே இடத்தில் கண்ணகி சிலை வைக்கும் போராட்டம் 31.12.2001 திங்கள் சென்னை அண்ணா சதுக்கத்தில் நடைபெற்றது. போராட்டத்தைத் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியும் தமிழ் தமிழர் இயக்கமும் மற்ற தமிழ் அமைப்புகளும் வெற்றிகரமாக நடத்தின. தோழர் பெ. மணியரசன் தலைமையில் நடந்த இப்போராட்டத்தில் பல தோழர்கள் கலந்து கொண்டு தளைப்பட்டனர்.

இதன் தொடர்ச்சியாக 2002 பிப்ரவரி 5இலிருந்து 9 வரை பூம்புகார் தொடங்கி மதுரை வரை கண்ணகியும் கோவலனும் கடந்து சென்ற வழியாக தமிழர் எழுச்சிப் பயணம் நடைபெற்றது. பயணத்தைத் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியும் தமிழ் தமிழர் இயக்கமும் மற்ற தமிழ் அமைப்புகளும் நடத்தின. தோழர் பெ. மணியரசன் தலைமை வகித்தார்.

## தமிழ்த் தேசம்

ஆண்டு நன்கொடை ரூ. 100/-

*பணம் அனுப்ப வேண்டிய முகவரி:*

**தமிழ்த் தேசம்**
**எண் 4, சிறிராமுலு தெரு,**
**வெங்கடாபுரம்,**
**அம்பத்தூர்,**
**சென்னை - 600 053**
**தொ.பே. : 6571395**



படிப்பகம்

www.padippakam.com

தமிழர் விடுதலைப் போர் முழக்கம்! சமூக நீதித் தமிழ்த் தேசம்!

தமிழ்த் தேசம்

திருவள்ளுவராண்டு 2033 சிலை-கும்பம்
கி.பி. திச. 2001- பிப். 2002
கடல் : 5
அலை : 1

எல்லாத் தொடர்புகளுக்கும்:
தமிழ்த் தேசம்,
4, சிறிராமுலு தெரு, வெங்கடாபுரம்,
அம்பத்தூர், சென்னை - 600 053
தொலைபேசி: 6571395

ஆசிரியர்: தியாகு • வெளியிடுபவர்: ச. நாத்திக நந்தனார்

# ஒற்றுமையும் கொள்கையும்

தமிழ்த் தேசியச் சக்திகள் ஒன்றுபட வேண்டிய காலமிது.

தமிழ்த் தேசியத்தின் பகைச் சக்திகள் நம் வளர்ச்சியைத் தடுக்கவும் நம்மை அடக்கி ஒடுக்கவும் முடிந்தால் அடியோடு அழிக்கவும் முயன்று வருகின்றன. பொடோ போன்ற அடக்குமுறைச் சட்டங்கள் நம்மைக் குறிவைத்து ஏவப்படுவதில் துளியும் அய்யமில்லை. தமிழ்நாட்டில் 'தமிழ்த் தீவிரவாதம்' கொடுங்குற்றமாய் கருதப்படுகிறது. தமிழ்வழிக் கல்விக்கான கோரிக்கையைக் கூட தீவிரவாதமாகத் தமிழின் பகைவர்கள் படங்காட்டி வருகிறார்கள்.

தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்துக்குப் பின்தளமாக இருந்து துணை செய்வது தமிழகத்தின் வரலாற்றுக் கடமை. இந்த இயற்கைக் கடமையைக் கூட நிறைவேற்ற நம் தமிழினத்துக்கு உரிமையில்லை. போருக்குத்தான் தளமாக முடியவில்லை என்றால் இப்போது அமைதிக்குத் தளமாவதற்கும் அனுமதி கிடையாதாம்! சொந்த இனத்துக்குப் பந்தி வைக்க வந்தேறியிடம் அனுமதி கேட்க வேண்டிய அவலம்!

கடந்தகாலத்தில் மொழி உணர்வு, இன உணர்வு பேசிய கட்சிகள் எங்கே? இன மானத் தலைவர்கள் எங்கே? அவர்கள் பாரத மாதாவின் பாதார விந்தங்களில் விழுந்து தொழுது கொண்டிருக்கிறார்கள். தங்கள் தில்லி விசுவாசத்தைக் காட்டுவதற்காக ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு இந்தியத் தேசிய ஆவியை எழுப்பும் கூட்டங்களில் அல்லேலுயா கத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பகையையும் துரோகத்தையும் வென்று தமிழ்த் தேசத்தின் அடிமை நிலைக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்காகத் தமிழ் மக்களை அணி திரட்டும் கடமை தமிழ்த் தேசியச் சக்திகளுக்கு உள்ளது.

நம் பகைவர்கள் யார்? நண்பர்கள் யார்? நமது போராட்டத்தின் களமும் காலமும் எத்தகையவை? என்ற வினாக்களுக்குத் தெளிவான விடை காணாமல் தமிழ்த் தேசியச் சக்திகள் தம் வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற முடியாது.

இன்று நாடெங்கிலும் ஒடுக்குமுறையை எதிர்த்தும், உரிமைகளுக்காகவும் மக்கள் போராட்டங்கள் எழுந்து கொண்டும் வளர்ந்து கொண்டும் இருக்கின்றன. அரசு ஊழியர்களும் ஆலைத் தொழிலாளர்களும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். உழவர் பெருமக்கள் குமுறிக் கொண்டிருக்கிறார்கள். அரசும் தனியாரும் போட்டி போட்டுக் கொண்டு வேலைவாய்ப்புகளைக் குறுக்கிக் கொண்டிருப்பதால் இளைஞர்கள் கொந்தளிக்கிறார்கள்.

அரசும் ஆதிக்கச் சக்திகளும் ஏவி விட்டுள்ள வன்கொடுமைகளை எதிர்த்துத் தலித்துகளும் பழங்குடி மக்களும் கிளர்ந்தெழுந்து போராடுகிறார்கள். காவல்நிலையக் கொடுமைகளையும் ஆணாதிக்க வெளிபாடுகளையும் எதிர்த்துப் பெண்ணுரிமையின் குரல் ஓங்கி ஒலிக்கிறது.

இந்தக் கிளர்ச்சிகள், இந்தப் போராட்டங்கள் முழு வெற்றி பெற வேண்டுமானால் இவை தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் இணைந்தாக வேண்டும். தமிழ்த் தேசியச் சக்திகள் திட்டமிட்டு முனைந்து பாடுபடாமல் இந்த இணைப்பு நிகழாது. எல்லா வகை ஒடுக்குமுறைகளும் இந்திய வல்லாதிக்கத்தில் மையம் கொண்டுள்ளன என்பதால் எல்லா வகை விடுதலையும் - தேசிய விடுதலை, வர்க்க விடுதலை, சமூக விடுதலை, பெண் விடுதலை, சுற்றுச் சூழல் விடுதலை யாவும் - தமிழ்த் தேசியத்தில்தான் மையம் கொண்டாக வேண்டும். வேறு வழியேதுமில்லை.



படிப்பகம்

www.padippakam.com

தமிழா! நீ எவ்வகை அடிமையானாலும் அடிமைத் தேசத்தின் அடிமை என்பதை நினைவிற்கொள்.

இந்த உண்மையை ஒவ்வொரு தமிழனும் உணரும்படிச் செய்வதும் அடிமைநிலையை எதிர்த்துப் போராட அணி திரளும்படி செய்வதும் தமிழ்த் தேசியச் சக்திகளின் கடமை. இந்தக் கடமையைச் சரிவரச் செய்திட தமிழ்த் தேசியச் சக்திகளின் ஒற்றுமை தேவை.

இந்த ஒற்றுமை கொள்கை அடிப்படையிலானதாக இருப்பது அதை விடவும் தேவை.

இந்த வரலாற்றுத் தேவையை நிறைவு செய்யும் வகையில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியும் தமிழ் தமிழர் இயக்கமும் தமிழர் தன்மானப் பேரவையும் ஒருங்கிணைந்து தமிழ்த் தேசிய முன்னணியை அமைத்திருப்பது ஒரு நல்ல தொடக்கம். தமிழ்த் தேசிய முன்னணியின் கொள்கை அறிக்கை இந்த இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியப் புரட்சியின் தமிழ்த் தேசக் குடியரசு அமைப்பது தன் மையக் குறிக்கோள் என்று தமிழ்த் தேசிய முன்னணி அறிவித்துள்ளது.

தமிழ்த் தேசத்தின் அடிமை நிலையை மூடி மறைப்பதற்காக நடத்தப்படும் தேர்தல் கூத்துகளைப் புறக்கணித்து வெகுமக்கள் போராட்டப் பாதையை நாடுவதே தமிழ்த் தேசிய முன்னணியின் வழிமுறை.

தமிழ்த் தேசிய முன்னணி கூட்டுத் தலைமையிலும் சனநாயகச் செயற்பாட்டிலும் உறுதியாக நம்பிக்கை வைத்துள்ளது.

தமிழ்த் தேசிய முன்னணியில் இணையும் இயக்கங்கள் அல்லது கட்சிகள் தத்தமது அமைப்புகளைக் கலைக்கவோ தம் தனித்தச் செயற்பாடுகளைக் கைவிடவோ தேவையில்லை.

உறுதியான கொள்கை அடிப்படையில் உருப்பெற்றுள்ள தமிழ்த் தேசிய முன்னணியில் தமிழ்த் தேசிய அமைப்புகளோடு தனிப்பட்ட தமிழ்த் தேசிய உணர்வாளர்களும் கூட - முன்னணியின் அமைப்பு விதிகளுக்கு உட்பட்டு - இணையலாம்.

தமிழ்த் தேசிய முன்னணியில் இணைந்து கொள்கை சார்ந்த ஒற்றுமையை விரிந்த அளவில் கட்டியமைத்திட முன்வருமாறு அனைத்துத் தமிழ்த் தேசியச் சக்திகளையும் அன்போடும் உரிமையோடும் அழைக்கிறோம்.

வரும் மார்ச்சு 17ஆம் நாள் மதுரையில் கூடும் தமிழ்த் தேசிய முன்னணியின் தொடக்க மாநாடு எல்லா வகையிலும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்!

## தி.க.சி. எழுதுகிறார்...

தமிழ்த் தேசம் இதழ் முற்றிலும் படித்தேன். கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம் - ஓர் அரிய கட்டுரை. "தேசிய விடுதலைக்கும் புரட்சிகர சனநாயகத்துக்கும் சமூகநீதிக்குமான மக்கள் போராட்டங்களே, மதத் தீவிரவாதத்துக்கும் பயங்கரவாதத்துக்கும் சரியான தீர்வாக இருக்க முடியும். தனிமனித பயங்கரவாதம், அரச பயங்கரவாதம், இரண்டையுமே ஏற்பதற்கில்லை" என்னும் தங்கள் கருத்துக்களுடன் எனக்கு முழு உடன்பாடு; இதுவே சரியான மார்க்சிய-லெனினியப் பார்வை என்று எனக்குத் தோன்றுகிறது; இந்த வழியில், தங்களது வாழ்வும், பன்முக மக்கள் தொண்டும், மேன்மேலும் தொடர வேண்டும்; குறிப்பாக, கலை இலக்கியத் துறையில் தமிழ்ச் சூழலுக்கு ஏற்ப, ஓர் முற்போக்கு ஒற்றுமைக் கூட்டணியை வலுப்படுத்துவதற்குத் தங்களது அறிவும் ஆற்றலும் பயன்பட வேண்டும்; இதுவே, புத்தாண்டில், என் தோழமை வேண்டுகோள்...

ஸ்டீ..பன் ஹாக்கிங்கின்

**காலம்**

**ஒரு வரலாற்றுச் சுருக்கம்**

மாபெரும் அறிவியலாளர் ஸ்டீஃபன் ஹாக்கிங் எழுதி வெளிவந்த ஆங்கில நூல் A Brief History of Time நலங்கிள்ளி தமிழாக்கத்தில் வெளிவந்துள்ளது. நூலின் பதிப்பாசிரியர் தோழர் தியாகு. காலம் - ஒரு வரலாற்றுச் சுருக்கம் தமிழாக்கத்தை உலகத் தமிழ் மொழி அறக்கட்டளை வெளியிட்டுள்ளது.

விலை: ரூ.100/-
பக்கம்: 320

நூலின் திறனாய்வு... அடுத்த இதழில்

## வாருங்கள் தமிழர்களே!
## கூடுவோம் கூடல் மாநகரில்!

தமிழ்த் தேசிய முன்னணி தொடக்க மாநாடு

மதுரை தேனி சாலை தாய் மூகாம்பிகை திருமண மண்டபத்தில் [மாப்பிள்ளை விநாயகர் திரையரங்கு அருகில்] வரும் மார்ச்சு 17ஆம் நாள் ஞாயிறு அன்று காலை 9 முதல் இரவு 9 வரை தமிழ்த் தேசிய முன்னணி தொடக்க மாநாடு நடைபெறவுள்ளது வாருங்கள் தமிழர்களே! கூடுவோம் கூடல் மாநகரில்!



படிப்பகம்

www.padippakam.com

பு.ஜ. தொடர் கட்டுரைக்கு மறுப்பு:

# புரட்டுவதே மூலவுத்தி புளுகுவதே தந்திரவுத்தியா?

**தியாகு**

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு என்ற முத்திரை தாங்கி வெளிவரும் *புதிய ஜனநாயகம்* வெளியிட்ட '**ஈழ விடுதலை: இந்தியாவின் நிலையும் விடுதலைப் புலி- ஆதரவாளர்களின் தமிழினத் துரோகமும்**' கட்டுரையை மறுத்து நான் '**விடுதலைப் புலிகள் இந்திய அரசின் ஏவலாட்களா?**' என்ற தலைப்பில் *தமிழ்த் தேசம்* ஏட்டில் (2000 ஆகஸ்டு-திசம்பர், 2001 சனவரி-பிப்ரவரி) எழுதியிருந்தேன். என் வாதுரைகளில் சிலவற்றைக் கண்டுகொள்ளாமல் விடுத்தும் சிலவற்றை மறுத்தும் 'சவடாலுக்கு மூலஉத்தி சந்தர்ப்பவாதமே தந்திரஉத்தி - "தமிழ்த் தேச"த்தின் சதிராட்டம்' என்ற தலைப்பில் மூன்று பகுதிகள் கொண்ட ஒரு தொடர்கட்டுரையே வெளியிட்டுள்ளது பு.ஜ. (இதழ் 18-19, 20, 21-22). இந்தத் தொடர்கட்டுரையை பு.ஜ. ஆசிரியர் குழுவே எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு ஒன்றின் ஆசிரியர் குழு ஒரு விவாதக் கட்டுரை எழுதுகிறது என்னும் போது அக்கறை மிகுந்த பொறுப்புணர்வோடும் விருப்பு வெறுப்பற்ற முழுமையான புறஞ்சார் தன்மையோடும் (objectivity) எழுதும் என்றுதான் எதிர்பார்க்க வேண்டும். ஆனால் பு.ஜ. ஆசிரியர் குழுவோ விவாதப் பொருளுக்குத் தொடர்பே இல்லாமல் ஆங்காங்கு அம்பு விடுகிறது. விவாதத்தைத் திசை திருப்புவது, எதிராளி பற்றிய ஒரு மோசமான படிமத்தை உண்டாக்கி எதிராளியின் வாதங்களைக் கவனிக்க விடாமல் செய்வது, தம் வாதங்களில் உள்ள ஓட்டைகளை மறைப்பது - இவற்றில் எது நோக்கமாயினும் சரி, பு.ஜ. விடும் அம்புகளைச் சந்திக்காமல் அடியேன் ஒதுங்கப் போவதில்லை.


புதிய ஜனநாயகம்
சவடாலுக்கு மூலஉத்தி
சந்தர்ப்பவாதமே தந்திர உத்தி
— ''தமிழ்த் தேச''த்தின் சதிராட்டம்

பு.ஜ. சொல்கிறது:

" "தனித் தமிழீழம்தான் தீர்வு என்பதில் உறுதியாக இருப்பதாய்ச் சொல்லிக் கொண்டே இலங்கையின் அரசியல் சட்டத்துக்கும் இறையாண்மைக்கும் உட்பட்டுத் தீர்வு காண வேண்டும் என்ற தீர்மானத்துக்கும் கைதூக்குவது முரண்பாடுதான். இது சந்தர்ப்பவாதமா என்றால் சந்தர்ப்பவாதம்தான்" என்கிறார் தியாகு. **இது சந்தர்ப்பவாதம்தான் என்பது அவர்களுக்கே தெரியவில்லை. சந்தர்ப்பவாதமா என்று கேட்டால் சந்தர்ப்பவாதம்தான் என்று ஒப்புக்கொள்வார்கள் என்கிறார் தியாகு.**" (பு.ஜ. இதழ் 18-19, பக். 20. அழுத்தம் எனது)

மீண்டும் ஒரு முறை படித்துப் பாருங்கள் - பு.ஜ. உத்தி புலப்படும்! முதல் பகுதி நான் எழுதியதை நேர்க்கூற்றாக (direct speech) எடுத்துக்காட்டுகிறது. அழுத்தம் சேர்க்கப்பட்டுள்ள இரண்டாம் பகுதி அதையே அயற்கூற்றாக (indirect speech) இயம்புகிறது. அல்லது அதற்குப் பொருள்விளக்கம் தருகிறது. என் நேர்க்கூற்றாக இருப்பதையும் அதன் அயற்கூற்றாக அல்லது பொருள்விளக்கமாக பு.ஜ. காட்டுவதையும் கவனமாக ஒப்புநோக்குங்கள் - இரண்டுக்கும் எவ்வளவு பெரிய வேறுபாடு!

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ., பா.ம.க. நிறுவனர் இராமதாசு முதலானவர்களின் நிலைப்பாட்டில் உள்ள முரண்பாட்டைச் சுட்டி இது சந்தர்ப்பவாதம்தான் என்கிறேன் நான். இது சந்தர்ப்பவாதம் என்பது அவர்களுக்கே தெரியவில்லை என்று இதற்குப் பொருள்விளக்கம் கொள்ளக் கொஞ்சமாவது இடமிருக்கிறதா? "இது சந்தர்ப்பவாதமா என்றால் சந்தர்ப்பவாதம்தான்" என்று நான் சொல்கிறேன். அவர்கள் இப்படி ஒப்புக்கொள்வார்கள் என்று நான் சொன்னதாக இதற்குப் பொருள் கொள்வது புரட்டல் இல்லையா?

தெரிந்து செய்தாலும் தெரியாமற் செய்தாலும் சந்தர்ப்பவாதம் சந்தர்ப்பவாதம்தான்! புரட்டல்வாதம் புரட்டல்வாதம்தான்!

பு.ஜ. சொல்கிறது:

" "இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்புவதில்லை என்ற இந்திய அரசின் முடிவே" எத்தகையது? **பொய்யும் சதித்தனமும் அரசியல் உள்நோக்கமும் கொண்டதில்லையா?**" (பு.ஜ. இதழ் 18-19, பக்.20. அழுத்தம் எனது.)

சரி. ஒரு முடிவை ஆதரிப்பதா எதிர்ப்பதா என்பதற்கு அந்த முடிவுக்கான உள்நோக்கத்தை மட்டும் உரைகல்லாகக் கொள்வதுதான் மார்க்சிய-லெனினிய அணுகுமுறையா? இப்படிச் செய்வது அகநிலைவாதம் (subjectivism) ஆகாதா? புறநிலையில் அந்த முடிவு எந்தச் சக்திகளுக்குப் பயன்படக் கூடியது என்று கருதிப் பார்க்க வேண்டாமா? சீனத்தில் ஜப்பானியப் படையெடுப்புக்கு எதிரான போரில் சியாங் கே-ஷேக்கின் கோமிண்டாங்குடன் கூட்டணி சேருவதற்கு மாவோ தலைமையிலான கம்யூனிஸ்டுகள் அளித்த முக்கியத்துவம் பு.ஜ.வுக்குத் தெரியாதா? சியாங் கே-ஷேக்கின் உள்நோக்கம் கம்யூனிஸ்டுகளை அழிப்பதுதான் என்று தெரிந்தே மாவோ இப்படிச் செய்தார். 'சியாங் கே-ஷேக்கின் முடிவு **பொய்யும் சதித்தனமும் அரசியல் உள்நோக்கமும் கொண்டதில்லையா?**' என்று மாவோவைப் பார்த்துக் கேட்க அப்போது பு.ஜ. இல்லாமற் போய் விட்டது!

இரண்டாம் உலகப் போரின் போது பிரித்தானிய, பிரெஞ்சு, அமெரிக்க வல்லாதிக்க (ஏகாதிபத்திய) அரசுகளோடு சேர்ந்து பாசிச எதிர்ப்புக் கூட்டணி அமைக்க ஸ்டாலின் தலைமையிலான சோவியத்து ஒன்றியமும் உலகளாவிய கம்யூனிஸ்டுகளும் சனநாயகவாதிகளும் விரும்பியது, முயன்றது, அந்த முயற்சியில் வெற்றி பெற்றது... இதையெல்லாம் பு.ஜ. எவ்வாறு புரிந்து கொள்கிறது? சர்ச்சிலின் உள்நோக்கம், ரூஸ்வெல்டின் உள்நோக்கம் எல்லாமே இட்லரைக் கொண்டு கம்யூனிஸ்டுகளை ஒழித்துக் கட்டுவதுதான் என்று ஸ்டாலினுக்குத் தெரியாதா? சோவியத்து ஒன்றியத்துடன் பாசிச எதிர்ப்பு அணி அமைக்க மேலை வல்லாதிக்கங்கள் எடுத்த முடிவும்



படிப்பகம்

www.padippakam.com

கூட **பொய்யும் சதித்தனமும் அரசியல் உள்நோக்கமும் கொண்டதில்லையா?** - ஸ்டாலினைப் பார்த்து இப்படிக் கேட்க அப்போது பு.ஜ. இல்லாமற் போய் விட்டது!

நான் இந்த வரலாற்றுச் சான்றுகளை எடுத்துக்காட்டுவது பு.ஜ.வின் அகநிலைவாதம் எவ்வளவு ஆபத்தானது என்பதைக் காட்டுவதற்காகவே தவிர, களத்திலும் காலத்திலும் வேறுபட்ட நிகழ்வுகளை இயந்திரத்தனமாய் நிகராக்குவதற்கோ, ஒன்றைக் காட்டி மற்றொன்றை நியாயப்படுத்துவதற்கோ அல்ல! தேர்தலில் சந்தர்ப்பவாதக் கூட்டுச் சேருகிற கட்சிகள் கூட தங்கள் சந்தர்ப்பவாதத்தை மறைப்பதற்காக 'ஸ்டாலின் இப்படிச் செய்தார், மாவோ அப்படிச் செய்தார்' என்று வரலாற்று ஒப்புமை காட்டுவதை நானறிவேன், அதில் எனக்கு உடன்பாடில்லை.

ஒரு முடிவுக்குப் பின்னிருக்கும் உள்நோக்கத்தைக் கணக்கில் கொள்ள வேண்டும் என்பது சரி! ஆனால் அந்த உள்நோக்கம் மட்டுமே உங்கள் கணிப்பைத் தீர்மானித்து விடக் கூடாது. தீய உள்நோக்கத்தோடு செய்யப்படுகிறவை நற்செயல்களாக அமைந்து விடவும், தூய உள்நோக்கத்தோடு செய்யப்படுகிறவை தீச்செயல்களாக அமைந்து விடவும் நிறையவே வாய்ப்புண்டு. "The way to hell is paved with good intentions" என்பார்கள். ஆம், நரகத்துக்குப் பாதை அமைக்க நல்ல நோக்கங்கள் பயன்பட்டிருக்கலாம்! அதே போல் சொர்க்கத்துக்குப் பாதை அமைக்கத் தீய நோக்கங்களும் உதவலாம்! புவியிலொரு சொர்க்கம் அமைக்கப் போராடுகிறவர்களுக்கு இது தெரிந்திருக்க வேண்டாமோ?

இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்புவதில்லை என்று இந்திய (தேசிய சனநாயகக் கூட்டணி) அரசு எடுத்த முடிவுக்குப் பின்னாலுள்ள காரணிகள் பலவற்றை பு.ஜ. எடுத்துக்காட்டுகிறது. நாமும் இவற்றைப் பல் வேறு தருணங்களில் எடுத்துக்காட்டியுள்ளோம்.

**... உள்நோக்கம் மட்டுமே உங்கள் கணிப்பைத் தீர்மானித்து விடக்கூடாது**

இந்திய அரசின் பொய்மையையும் சதித்தனத்தையும் அரசியல் உள்நோக்கத்தையும் தோலுரித்துக் காட்டுவதில் பு.ஜ.வோடு நாம் முழுக்க உடன்படுகிறோம். இவற்றை நாம் மறைக்கவும் இல்லை, மறைக்க வேண்டிய தேவையும் இல்லை. ஆனால் இந்தக் காரணிகளில் முதன்மையானது எதுவோ அதை பு.ஜ. மறைக்கிறது - தமிழீழ மண்ணில் விடுதலைப் புலிகள் இந்தியப் படைக்கு முகம் கொடுத்து, அதன் நோக்கத்தை முறியடித்தார்களே, ஈகம் செறிந்த அந்த வீரத்தை ஏற்றுக்கொள்ள மட்டும் பு.ஜ.வுக்கு மனமில்லை.

பு.ஜ. சொல்கிறது:

" **"இதோ நாளையே ஈழம் மலரும். யாழ் கோட்டையில் புலிகளின் கொடி பறக்கும்"** என்று தியாகு போன்றவர்களின் ஆர்ப்பரிப்புகளுக்கு மாறாக..." (பு.ஜ. இதழ் 18-19, பக்.20. அழுத்தம் எனது.)

நாளையே ஈழம் மலரும், யாழ் கோட்டையில் புலிக் கொடி பறக்கும் என்று நான் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் எழுதியதோ பேசியதோ கிடையாது. 'தியாகு போன்றவர்கள்' பேசினார்கள் என்றால் யார் எங்கே எப்போது பேசினார்கள்? என்று சொல்ல வேண்டும், அதற்குச் சான்று தர வேண்டும்.

தியாகுவோ தியாகு போன்றவர்களோ இப்படிப் பேச வாய்ப்பே இல்லை. ஏனென்றால் ஈழம் மலர்வதும் யாழ் கோட்டையில் புலிக் கொடி பறப்பதும் ஒன்றல்ல, பார்க்கப் போனால் 1990ஆம் ஆண்டே யாழ் கோட்டையில் புலிக் கொடி ஏற்றப்பட்டு விட்டது. ஆனால் இன்று வரை ஈழம் மலர்ந்து விடவில்லை. நாளை மலரப் போகும் தமிழீழத்தின் தலைநகரம் திருகோணமலையே தவிர, யாழ்ப்பாணம் அன்று.

"நாளை தமிழீழம் மலரும், திருகோணமலையில் புலிச் சின்னம் பொறித்த தமிழீழத் தேசியக் கொடி பறக்கும்" என்று சொல்வதில் தவறில்லை. நாளை என்பது இங்கு அடுத்த நாளையோ அதற்கடுத்த நாளையோ குறிக்காது. எதிர்காலத்தில், விரைவில் என்றுதான் இதற்குப் பொருள் கொள்ள வேண்டும். ஒரு விடுதலைப் போராட்டத்துக்கு இந்த நம்பிக்கை இருந்தாக வேண்டும். இப்படிச் செய்வது விடுதலைக்குத் தேதி குறிப்பதாகாது.

பிரபாகரனே தெளிவாக இதைச் சொல்லியிருக்கிறார்: வியத்நாம் விடுதலைப் போர் தொடங்கிய போது அது முப்பதாண்டு நீடிக்கும் என்று அவர்கள் எண்ணியிருக்க மாட்டார்கள். ஆனால் அது முப்பதாண்டு நடந்து முடிவில் வெற்றி பெற்றது. தமிழீழ விடுதலைப் போர் முப்பதாண்டு நீடிக்கலாம், அதற்கு மேலும் தொடரலாம். நாங்கள் போராடுவோம். எங்களுக்குப் பின் அடுத்து வரும் எங்கள் சந்ததியினர் போராடுவர். பகைவன் களைத்துப் போய்க் கைவிடுகிற வரை எங்கள் போராட்டம் தொடரும். இறுதியில் நாங்கள் வெற்றி பெறுவோம்.

"நாளை தமிழீழம் மலரும்" என்பது வரலாற்றுத் தேவையின் அடிப்படையில் எழும் நம்பிக்கை! ஒரு மக்கள்-போராட்டத்தின் வளர்ச்சி வரலாறு, அப்போராட்டத் தலைமையின் ஆற்றல் மதிப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில் வளரும் நம்பிக்கை! இந்த நம்பிக்கையை ஏகடியம் செய்வதில் பு.ஜ. அடையும் மகிழ்ச்சி ஏனோ நமக்கு துக்ளக் சோவை நினைவுபடுத்துகிறது.

படிப்பதற்கு ஒரு பரிந்துரை: மாவோ எழுதிய "நீடித்த போர் குறித்து" (On Protracted War) கட்டுரையை பு.ஜ. ஆசிரியர் குழுத் தோழர்கள் படித்துப் பார்க்கலாம். படிப்பதற்கு மற்றொரு பரிந்துரை: துக்ளக் சோ, சுப்பிரமணியசாமி போன்றவர்கள் இதுவரை பு.ஜ. படிக்கவில்லை என்றால் இனிமேலாவது வாங்கிப் படிக்கலாம்! புலி வேட்டைக்குப் பயனுள்ள 'விஷயங்கள்' நிறையக் கிடைக்கும்!

புலிகளோ புலிகளை ஆதரிக்கும் நாமோ ஈழ விடுதலைக்குத் தேதி குறிக்கும் வேலையில் ஒரு போதும் இறங்கவில்லை. ஆனால் 'இந்தியப் புரட்சி'க்குத் தேதி குறித்தவர்களை பு.ஜ. இவ்வளவு சீக்கிரம் மறந்து விட்டதா? நாமும் மறந்து விட வேண்டும் என்று எதிர்பார்க்கிறதா? லெனின் குறிப்பிட்ட 'புரட்சிகர வாய்ச்சொல்' பு.ஜ. தரப்புக்கே முற்றுரிமையாக இருக்கட்டும்! அது நமக்கு வேண்டாம்!

பு.ஜ. தொடர்கிறது:

"... யாழ் பகுதியில் சுற்றி வளைக்கப்பட்ட சிங்கள இராணுவத்துக்கு எதிராகப் புலிகள் இறுதித் தாக்குதல் தொடுப்பதைத் தவிர்த்து விட்டதற்கான உண்மையான காரணமே இந்தியா இராணுவத் தலையீடு செய்வதற்குத் தயார் நிலையில் இருந்ததுதானே!" (பு.ஜ. இதழ் 18-19, பக்.20)

யாருக்கும் தெரியாத உண்மைக் காரணத்தை பு.ஜ. ஆசிரியர் குழு கண்டுபிடித்து விட்டது. அது சரி, இதற்கென்ன ஆதாரம்? புலிகள் இந்திய அரசின் ஏவலாட்கள் என்று பு.ஜ. கருதுவதுதான் ஆதாரம்! அவர்கள் இந்திய அரசின் ஏவலாட்கள் என்பதற்கு என்ன ஆதாரம்? அவர்கள் இறுதித் தாக்குதல் தொடுப்பதைத் தவிர்த்து விட்டதுதான் ஆதாரம்! இதற்கு அது ஆதாரம்! அதற்கு இது ஆதாரம்! தொன்னைக்கு நெய்யும், நெய்க்குத் தொன்னையும் ஆதாரம் ஆவதில்லையா, அதே போல்! கணிப்புக்குக் கணிப்பே எப்படி ஆதாரமாகும்? என்று பு.ஜ.விடம் கேட்டீர்களானால் அதெல்லாம் பித்தலாட்டம்!

அது சரி, புலிகள் இந்திய அரசின் ஏவலாட்கள் என்றால், அவர்களது முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த இந்தியா இராணுவத் தலையீடு புரிய வேண்டிய தேவை என்ன? பு.ஜ.வுக்கே வெளிச்சம்!



படிப்பகம்

www.padippakam.com

"இது எங்கள் உறுதியான கொள்கை, ஆனால் இதை மத்திய அரசிடம் வலியுறுத்த மாட்டோம்" என்று யார் சொன்னாலும் அது குற்ற விமர்சனத்திற்குரியதே என்று எழுதியுள்ள நான், குற்ற விமர்சனத்திற்குரியவர் யார் என்று குறிப்பிடவே இல்லையாம்! இது பித்தலாட்டமாம்!

நான் எழுதுவது *தமிழ்த் தேசம்* படிக்கிறவர்களுக்காகவே தவிர பு.ஜ. ஆசிரியர் குழுவிடம் சான்றிதழ் வாங்குவதற்காக அல்ல. *தமிழ்த் தேசம்* படிக்கிறவர்களுக்கு ஒவ்வொன்றையும் உரித்துத்தான் கொடுக்க வேண்டும் என்ற தேவை இல்லை. தமிழீழம் தொடர்பாக "இது எங்கள் உறுதியான கொள்கை, ஆனால் இதை மத்திய அரசிடம் வலியுறுத்த மாட்டோம்" என்று கூறியவர் யார் என்பதும், அவரை இதற்காகத் தெளிவாகவும் கூர்மையாகவும் (மொண்ணையாகவும் அன்று, முரட்டுத்தனமாகவும் அன்று) நாங்கள் குற்றவிமர்சனம் செய்கிறோம் என்பதும் *தமிழ்த் தேசம்* படிக்கிற ஒவ்வொருவருக்கும் தெரியும். இந்தக் கூற்றுக்கு உரியவரான வைகோ ஆயினும், இராம்தாசு ஆயினும், வீரமணி ஆயினும், கருணாநிதி ஆயினும், வேறு எவராயினும் தமிழீழப் போராட்டம் தொடர்பாக சந்தர்ப்பவாதம் செய்கிறவர்களைக் குற்றவிமர்சனம் செய்வதில் நமக்கு எவ்விதத் தயக்கமும் இல்லை. இவர்களைப் பற்றி எவ்வித மயக்கமும் இல்லை. குற்றவிமர்சனத்துக்குரிய ஒவ்வொரு தலைவரையும் ஒவ்வொரு கட்சியையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறிப்பிட்டுச் சொல்லி, பு.ஜ. ஆசிரியர் குழுவிற்கு அறிக்கையிடும் தேவை நமக்கு இல்லை.

தமிழீழம் தொடர்பான சந்தர்ப்பவாத நிலைப்பாடுகளை நாம் விமர்சித்திருக்கிறோமா? விமர்சித்திருக்கிறோம். தெளிவாகவும் கூர்மையாகவும் பல முறை விமர்சித்திருக்கிறோம்.

பு.ஜ. சொல்கிறது: "அப்படியே ஏதாவது விமர்சனம் என்று எடுத்துக்காட்டினாலும் அவை ஜெயலலிதா மீது வீரமணி வைக்கும் விமர்சனப் பாணியிலானவையாகத்தான் இருக்கின்றன." (பு.ஜ. இதழ் 18-19, பக் . 21. அழுத்தம் எனது.) நமது விமர்சனங்களில் ஒன்றே ஒன்றையாவது எடுத்துக்காட்டி அது எப்படி 'வீரமணி-விமர்சனப் பாணி'யில் உள்ளது என்று பு.ஜ. தெளிவுபடுத்தினால் அது நமக்கு உதவியாக இருக்கும்! இப்படிச் செய்யாமல் போகிற போக்கில் புழுதி வாரித் தூற்றுவதற்கு என்ன பெயர்? பித்தலாட்டமா? அடிமுட்டாள்தனமா?

விவாதப் பொருளிலிருந்து விலகிச் சென்று பு.ஜ. என்னைப் போன்றவர்களின் விமர்சன முறையில் குற்றம் காண்கிறது: நாங்கள் எதிர்த்தரப்பினர் மீதே கூட "மொன்னை"யான விமர்சன முறையைப் பின்பற்றுவதை மரபாகக் கொண்டவர்களாம்! தமிழ்வழிக் கல்வி மீதான சன் தொலைக்காட்சி விவாதத்தில் பத்மா சேஷாத்ரியுடன் நான் கலந்து கொண்டு உசாவிய நிகழ்ச்சி இதற்கு ஓர் எடுத்துக்காட்டாம்!

பு.ஜ. ஆசிரியர் குழுவுக்கு அறிவுநேர்மை இருக்குமானால் விமர்சனத்தைத் திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். சன் தொலைக்காட்சி விவாதத்தில் என் குற்றம் அல்லது குற்றங்கள் என்ன? என் கருத்தில் பிழை கண்டீர்களா? அதை முன்வைத்த முறையில் பிழை கண்டீர்களா? அல்லது இந்த விவாதத்தில் கலந்து கொண்டதே தவறு என்கிறீர்களா? பத்மா சேஷாத்திரியுடன் உசாவுதல் என்றால் என்ன பொருள்? மாற்றுக் கருத்துடையவர்களோடு அமைதியாக விவாதித்தால் அது மொண்ணையான விமர்சனம், அவர்களைக் கடித்துக் குதறுவதே கூர்மையான விமர்சனம் என்பதுதான் பு.ஜ.வின் பார்வையா?

தெளிவே இல்லாமல் பழி தூற்றுவதுதான் பு.ஜ. பாணி விமர்சனம் என்பதற்கே இது சான்றாகிறது. இந்த விமர்சனப் பாணிதான் கூர்மையானது என்றால், நமக்கு அந்தக் கூர்மை வேண்டவே வேண்டாம்.

பு.ஜ.வுக்கும் நமக்கும் இடையிலான வேறுபாடு விமர்சன முறையில் மட்டுமல்ல, விமர்சன உள்ளடக்கத்திலேயே உள்ளது என்று பு.ஜ. கூறுவதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். சந்தர்ப்பவாதத்தின் இரு கூறுகளில் ஒன்றை நடிப்பு என்றும் மற்றொன்றை உண்மை என்றும் கொண்டு அந்த அடிப்படையில் விமர்சனம் செய்வது பு.ஜ. அணுகுமுறை. இங்கேயும் பு.ஜ.வின் அகநிலைவாதமே வெளிப்படுகிறது. இரு கூறுகளையுமே உண்மை என்று, அல்லது இரண்டையுமே நடிப்பென்று ஏன் கொள்ளக் கூடாது? அல்லது பு.ஜ. உண்மை என்று சொல்வதை நடிப்பென்றும், அது நடிப்பென்று சொல்வதை உண்மையென்றும் ஏன் கொள்ளக் கூடாது? இந்தக் கேள்விகளை பு.ஜ. ஆசிரியர் குழுத் தோழர்கள் தங்களுக்குத் தாங்களே கேட்டுப் பார்த்துக் கொள்ளட்டும் - அகநிலைவாதத்தின் அபத்தம் விளங்கும்.

சந்தர்ப்பவாதம் குறித்த அணுகுமுறையை 'எது உண்மை? எது நடிப்பு?' என்று துப்பறியும் வேலையாகக் குறுக்கி விடுவது மார்க்சியப் பொருள்முதல்வாத அணுகுமுறை ஆகாது. உண்மையானாலும் நடிப்பானாலும் சமூகச் சக்திகளின் போராட்டத்தில் ஒரு நிலைப்பாடு அல்லது செயற்பாடு வகிக்கும் புறவயப் பங்கே (objective role) நமக்கு முதன்மையானது. இந்தப் பங்கு சந்தர்ப்பவாதத்தால் பிளவுண்டு முரண்பட்ட இரு கூறுகளாக வெளிப்படும் போது இரண்டில் உண்மை எது? நடிப்பு எது? என்று நம் வசதிக்கேற்ப முடிவு செய்து கொண்டு வாதிடுவதற்குப் பதிலாக, இரண்டுக்குமான முரண்பாட்டைக் கூர்மையாக வெளிப்படுத்துவதே சந்தர்ப்பவாதத்தை வெல்லவும், போராட்டத்துக்கு வலுச் சேர்க்கவும் பயன்படும்.

பு.ஜ.வின் விமர்சன முறை வடிவத்தில் மட்டுமல்லாமல் உள்ளடக்கத்திலேயே கருத்துமுதல்வாதச் சார்புடையது. மார்க்சிய-லெனினியம் என்று சொல்லிக் கொண்டே அதற்குப் புறம்பான விமர்சன முறையை (ஆய்வுமுறையை) பு.ஜ. கடைப்பிடிக்கிறது. ஆகவே இது வெறும் வசவு பற்றிய சிக்கலன்று. பு.ஜ. ஆசிரியர் குழு ஆத்திரப்படாமல் அறிவுவழியில் கருதிப் பார்க்க வேண்டுகிறோம். ருசியப் புரட்சியின் வரலாற்றில் மென்சுவிக்குகளின் சந்தர்ப்பவாதத்தை லெனின் எவ்விதம் கையாண்டார் என்பது நமக்கு நல்லதொரு பாடமாகப் பயன்படும்.

மூலவுத்தி, தந்திரவுத்தி என்ற பேச்சே பு.ஜ.வுக்கு எரிச்சலூட்டுகிறது. இப்படிப் பேசுவதால் நானும் ஒரு மூலவியாதிக்காரன் என்று தெரிந்து விட்டதாம் ! வைகோ, இராமதாசு, கருணாநிதி, திருமாவளவன், கிருஷ்ணசாமி, ஜெயலலிதா போன்றவர்களும் போலிக் கம்யூனிஸ்டுகள்-போலிப் புரட்சியாளர்களும் தமது சந்தர்ப்பவாதத்தை நியாயப்படுத்துவது போல், நானும் விடுதலைப் புலிகள் மற்றும் அவர்தம் ஆதரவாளர்களின் சந்தர்ப்பவாதங்களை எல்லாம் மூலவுத்தி, தந்திரவுத்தி என்ற அடிப்படையில் விளக்கி நியாயப்படுத்த முயல்கிறேனாம்.

சந்தர்ப்பவாதிகள் தங்களின் அரசியல் குட்டிக்கரணங்களை நியாயப்படுத்திக் கொள்ள மூலவுத்தி-தந்திரவுத்தி என்று பேசுவது மெய்தான். இதனாலேயே மூலவுத்தி-தந்திரவுத்தி என்ற வகையினங்களை நாம் அடியோடு கைவிட்டு விட வேண்டும் என்பதில்லை. இந்த வகையினங்களைக் கொள்கையளவிலாவது பு.ஜ. ஏற்றுக் கொள்கிறதா? என்று முதலில் தெரிய வேண்டும். கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளாத ஒன்றை நடைமுறையளவில் எடுத்தாள முடியாது.

ஒருவர் மூலவுத்தி வகையில் எதிர்க்கப்பட வேண்டியவராய் இருக்கும் போதே அவரது குறிப்பிட்ட ஒரு செயலைத் தந்திரவுத்தி வகையில் ஆதரிக்கும் நிலைகள் எழலாம், எழக் கூடிய வாய்ப்பு உண்டு என்பதைக் கொள்கையளவில் பு.ஜ. ஏற்றுக் கொண்டால், தந்திரவுத்தி வகைப்பட்ட ஆதரவு என்பது மூலவுத்தி வகைப்பட்ட எதிர்ப்பின் ஒரு பகுதியாக அமைய முடியும் என்பதை விளங்கிக் கொள்ள இயலும்.

ஆதரிப்பதன் மூலம் எதிர்ப்பதா? தொழிற்கட்சித் தலைமை தொடர்பாக இப்படி ஓர் அரசியல் தந்திரவுத்தியை 1920இல் பிரித்தானியக் கம்யூனிஸ்டுகளுக்கு லெனின் பரிந்துரைத்தார். இந்த ஆதரவு "தூக்கிலிடப்படுகிறவனுக்குக் கயிறு வழங்கும் ஆதரவைப் போன்றது" என்று அவர் விளக்கினார்.

பு.ஜ. சொல்கிறது: "... இலங்கை அரசை இந்தியப் பிரதமர் எச்சரிப்பதும் கூட இலங்கை அரசை மிரட்டித் தனது மூலவுத்திக்கு ஏற்பப் பணிய வைப்பதுதானே தவிர தமிழீழ விடுதலைப்



படிப்பகம்

www.padippakam.com

போராட்டத்துக்கு ஆதரவான நிலை என்பதும் பொய்யானது." (பு.ஜ. இதழ் 18-19, பக்.23.)

இங்கேயும் பு.ஜ.வின் அகநிலைவாதமே தலைதூக்குகிறது. உள்நோக்கம் பற்றிய ஆராய்ச்சிதான் அதற்கு முதன்மையாகப் படுகிறது. இந்தியப் பிரதமர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கும் நோக்கத்துடன் இலங்கை அரசை எச்சரித்தார் என்பதன்று என் வாதம். அகநிலை நோக்கமன்று, புறநிலை விளைவுதான் முக்கியமானது.

தமிழீழம் தொடர்பான இந்திய அரசின் அடிப்படை நிலைப்பாட்டை மூலவுத்தி வகையில் எதிர்க்கும் போதே, ஒருசில சந்தர்ப்பங்களில் ஒருசில அறிவிப்புகளை, ஒரு சில அணுகுமுறைகளை ஆதரிப்பதில் தவறில்லை (எதிர்ப்பின் ஒரு பகுதியாகவே ஆதரித்தல்) என்று நான் சொன்னால், இந்திய அரசு ஈழ விடுதலைக்கு மூலவுத்தி வகையில் எதிராகவும், தந்திரவுத்தி வகையில் ஆதரவாகவும் இருக்கிறதென்று நான் சொல்வதாகப் புரட்டிப் பொருள் கொள்கிறது பு.ஜ.

வல்லாதிக்கம் (ஏகாதிபத்தியம்) மூலவுத்தி வகையில் அட்டைப் புலியே என்றும், ஆனால் அது தந்திரவுத்தி வகையில் உண்மைப் புலியாகவே உள்ளது என்றும் மாவோ சொல்கிறார் என்றால், அட்டைப் புலியாக இருப்பது வல்லாதிக்கத்தின் (ஏகாதிபத்தியத்தின்) மூலவுத்தி என்றும், உண்மைப் புலியாக இருப்பது அதன் தந்திரவுத்தி என்றும் பொருள் கொள்ளக் கூடாது. வல்லாதிக்கம் தொடர்பான நமது புரிதலும் அணுகுமுறையும் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான வழிகாட்டுதலே இது. வல்லாதிக்கம் தொடர்பான நமது அணுகுமுறையை வல்லாதிக்கத்தின் அணுகுமுறையாகவே திரித்து விடக் கூடாது. தில்லி வல்லாதிக்கம் தொடர்பான நமது அணுகுமுறை குறித்துச் சொன்னதை தில்லி வல்லாதிக்கத்தின் அணுகுமுறை குறித்தே சொன்னதாகக் காட்டுவது புரட்டலே தவிர வேறன்று.

## வல்லாதிக்கம் தொடர்பான நமது அணுகுமுறையை வல்லாதிக்கத்தின் அணுகுமுறையாகவே திரித்து விடக் கூடாது

புரட்டுவதோடு நிற்கவில்லை பு.ஜ.

"இந்தியாவிலிருந்து தமிழ்நாடு ஏன் பிரிய வேண்டும்? அப்படிச் செய்வதற்கு அவசியம் ஏதுமில்லை" என்று புலிகளின் அதிகாரபூர்வ அறிவுரையாளர் அன்றன் பாலசிங்கம் கூறியதாக பு.ஜ. கட்டுரையாளர் குறிப்பிட்டிருந்தார். எங்கு எந்தச் சூழலில் இப்படிச் சொன்னார்? இதற்கு என்ன சான்று? என்று கேட்டிருந்தேன். பு.ஜ. கட்டுரையாளர் தராத சான்றை பு.ஜ. ஆசிரியர் குழுவே தேடிப் பிடித்துக் கொடுத்திருக்கிறது:

**"1999 நவம்பர் 27 மாவீரர் தினத்தன்று இலண்டனில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் இருந்துதான் "பு.ஜ." எடுத்துக்காட்டியிருந்தது. (ஆதாரம்: "ஃபிரண்ட்லைன்" 1999 டிசம்பர் 24, பக்.127)."** (பு.ஜ. இதழ் 21-22, பக்.18.)

விவாதத்துக்குரிய கூற்றினை பாலசிங்கம் எந்த நாளில் சொன்னார்? 1999 நவம்பர் 27 மாவீரர் நாளில்! எங்கே? லண்டனில்! எந்தச் சூழலில்? பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில்! ஆதாரம் என்ன? ஃபிரண்ட்லைன், 1999 டிசம்பர் 24 இதழ்! அந்த இதழில் எந்தப் பக்கம்? 127ஆம் பக்கம்! இந்த மாபெரும் ஆதாரத்தை வைத்துக் கொண்டு பு.ஜ. ஆசிரியர் குழு என்ன குதி குதிக்கிறது, பாருங்கள்:

"தமிழ்நாட்டு சுயநிர்ணய உரிமைப் பிரச்சினையில் புலிகளின் நிலை துரோகத்தனமானது என்று அறியும் போது அதை விமர்சிக்கவோ எதிர்க்கவோ மறுக்கவோ துணிவும் திராணியுமற்ற தியாகு..."

புலிகளின் துரோகம்! அதை எதிர்க்கவோ மறுக்கவோ நமக்குத் துணிவில்லை! திராணியில்லை! அது மட்டுமா? பு.ஜ. தொடர்கிறது:

[தன்னுரிமைக்கு முன்னுரிமை, தனித் தமிழ்நாடு ஆகிய] "இந்த முழக்கங்களுக்கு அவசியம் ஏதுமில்லை என்று புலிகள் அறிவிக்கிறார்கள். அதை மறுக்கவோ எதிர்க்கவோ கண்டிக்கவோ மாட்டார்கள் என்றால் இவர்களின் இலட்சிய முழக்கங்கள் கேலிக் கூத்தாக்கப்படவில்லையா? **இவர்களின் நம்பகத்தன்மையே கேள்விக்குள்ளாகவில்லையா?**" (பு.ஜ. இதழ் 21-22, பக்.18, அழுத்தம் எனது.)

பு.ஜ.வின் நம்பகத்தன்மை எத்தகையது என்று பார்ப்போம். 1999 நவம்பர் 27 மாவீரர் நாளில் லண்டனில் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளித்தாராம் பாலசிங்கம்! அவரிடம் அவர்கள் தொடுத்த வினா என்ன? அதற்கு அவர் சொன்ன விடை என்ன? பு.ஜ.வால் சொல்ல முடியுமா? முடியாது.

ஏனென்றால் 1999 நவம்பர் 27இல் பாலசிங்கம் லண்டனில் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளித்தார் என்று பு.ஜ. ஆசிரியர் குழு சொல்வது பொய். (உண்மைக்கு மாறானது என்றோ தவறானது என்றோ எழுதினால் "மொண்ணை"யாக இருக்கும் என்பதால் பொய் என்றே கூர்மையாகச் சொல்கிறோம்). அந்தப் பேட்டிக்கு ஃபிரண்ட்லைன் 1999 டிசம்பர் 24 இதழை ஆதாரம் காட்டுவது புளுகின்பாற்பட்டது. பக்கம் 127 என்று துல்லியமாகச் சொல்கிறதே பு.ஜ., அந்தப் பக்கத்தில் இடம் பெற்றிருப்பது பாலசிங்கத்தின் பேட்டி அல்லவே அல்ல.

பாலசிங்கத்தின் மாவீரர் நாள் உரையின் சில பகுதிகளை மட்டும் மேற்கோளாகக் காட்டி டி.பி.எஸ். ஜெயராஜ் எழுதியுள்ள கட்டுரைதான் மேற்படி ஃபிரண்ட்லைன் இதழின் பக்கம் 126-28இல் வெளிவந்துள்ளது. மாவீரர் நாள் உரையை (அதுவும் ஒரு கட்டுரையாளர் மேற்கோளாகக் காட்டும் ஒருசில பகுதிகளை மட்டும் வைத்துக் கொண்டு) பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி என்று வலுவாக எடுத்துக்காட்டுவது புரட்டா? புளுகா?

போகட்டும். பு.ஜ. ஆசிரியர் குழுத் தோழர்கள் வேண்டுமென்றே பொய் சொல்லும் அளவுக்குத் தாழ்ந்து போவார்கள் என்று நான் கருதவில்லை. அவர்கள் மாபெரும் ஆதரமாகக் காட்டும் ஃபிரண்ட்லைன் கட்டுரையைக் கருத்தூன்றிப் படித்திருக்க மாட்டார்கள் போலும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மீதும் விடுதலைப் புலிகள் மீதும் கொண்ட வெறுப்பு பு.ஜ. ஆசிரியர் குழுவின் கண்ணை மறைத்து விட்டதோ என்றுதான் ஐயுறுகிறேன். அகவை 16 கண்ட மார்ச்சிய-லெனினிய அரசியல் ஏட்டின் ஆசிரியர் குழுவின் இந்த நிலை என்னை வருந்தச் செய்கிறது.

*(தொடரும்)*



படிப்பகம்

www.padippakam.com

டான் பிரீனின்

# அயர்லாந்து விடுதலைக்கான எனது போராட்டம்

15

## தொடர்வண்டி நிலையத்தில் தொடங்கிய போர்

திப்பரேரி வீரர்கள் ஏமாற்றி விட்ட போதிலும், எதிரிக்கு நாங்கள் யார் என்பதை மெய்ப்பித்துக் காட்ட வேண்டும் என்ற ஆத்திரத்துடன் தொடர்வண்டி நிலையத்திற்குள் விரைந்தோம். கடுஞ்சின வெறியில் முன்னால் வந்து கொண்டிருப்பவர்கள் கூட கண்ணிற்குத் தெரியவில்லை. நுழைவாயிலில் அகலை நிறைந்த ஒரு பெண்ணோடு நேராக மோதிக் கொண்டேன். மோதிய வேகத்தில் அவர் கீழே விழுந்து விடக் கூடாது என்பதற்காக அவரை அப்படியே கட்டிப் பிடித்துக் கொண்டேன். ஆனால் சமாளித்து நிற்க முடியாமல் அவரோடு சேர்ந்து சுற்றத் தொடங்கினேன். ஒன்றிரண்டு சுற்றுகள் சுற்றி, கீழே விழுந்து மறுபடியும் எழுந்து ஓடத் தொடங்கினேன். அப்பெண்மணியிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்ளக் கூட நேரமில்லை. அவரது முகத்தையும் பார்க்கவில்லை. எனது முகத்தை அவர் பார்த்திருக்கவும் வாய்ப்பில்லை. அன்று நடந்த அக்குளறுபடிக்கான விளக்கம் இன்று வரை அந்த அம்மாவிற்குக் கிடைத்ததோ என்னவோ தெரியவில்லை.

உள்ளே நுழைந்த எங்களுக்கு அங்கு இன்னொரு ஏமாற்றம் காத்திருந்தது. சீன் கோகன் அந்த வண்டியில் அழைத்து வரப்படவில்லை. எங்களுக்கு அது ஒரு வகையில் ஆறுதலாகவும் அமைந்தது. அடுத்த வண்டி வருவதற்குள் வேறெங்கிருந்தாவது உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு பெட்டியையும் அலசித் தேடி விட்டு, எங்களது பழைய இருப்பிடத்திற்குத் திரும்பினோம். இனி யாரிடமிருந்து உதவி பெறுவது எனத் தீவிரமாக ஆலோசிக்கத் தொடங்கினோம்.

கால்ட்டீ படைப் பிரிவைப் (Galltee Battalio) பற்றி விவாதித்தோம். கால் பல்லி (Galbally Bally), பல்லி லேண்டர்ஸ் (Bally landors) ஆகிய மலை மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்களைக் ,கொண்ட படைப் பிரிவு அது. அண்மையில்தான் படைத் தலைமை இப்பிரிவைத் தற்காலிகமாக வெளியேற்றியிருந்தது. ஆனால் அப்படைப் பிரிவின் நேர்மையைப் பற்றி நாங்கள் நன்றாகவே அறிந்து வைத்திருந்தோம். நெஞ்சுரம் கொண்ட உண்மையான வீரர்கள் அவர்கள்.

எங்கள் வேண்டுகோளை ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையிலும், திப்பரேரியினரைப் போல் ஏமாற்ற மாட்டார்கள் என்ற உறுதியிலும் அவர்களுக்குச் செய்தி அனுப்பினோம். தர்லெஸ்ஸிலிருந்து அடுத்த தொடர்வண்டி மாலை 7 மணிக்குத்தான். ஆனால் அடுத்த ஒரு மணி நேரத்திற்குள்ளேயே எங்களுக்கு ஊக்கம் தரும்படியான விடை கால்ட்டீ படைப் பிரிவிலிருந்து கிடைத்தது. மாலை 5 மணி அளவில் கால்ட்டீ வீரர்கள் அய்வர் எங்களோடு இணைந்து கொள்வர் என்ற செய்தியை அவர்கள் அனுப்பியிருந்தார்கள்.

குறித்த நேரத்திற்கு முன்னரே, 4.45 மணிக்கே கால்ட்டீ வீரர்கள் அய்வர் வந்து விட்டார்கள். ஈமன் ஓ' பிரெய்ன் (Eamon O' Brien), ஜேம்ஸ் ஸ்கேன்லான் (James Scanlon), ஜே.ஜே. ஓ' பிரெய்ன், ஸ்கேன் லிஞ்ச் (Scan Lynch), மார்ட்டின் போலே (Martin Foley) ஆகியோரே அந்த அய்வர் ஆவார். அவர்களுள் மார்ட்டின் போலேவை எங்களாலும் மறக்க முடியாது. அயர்லாந்து வரலாற்றாலும் மறக்க முடியாது. சரியாக இரண்டாண்டுகள் கழித்து மார்ட்டின் போலே மவுண்ட் ஜாய் சிறைச் சாலையில் தூக்கிலிடப்பட்டார்.

எங்களோடு சீன் கோகன் விடுதலை நிகழ்வில் கலந்து கொண்டதற்காகவே அவருக்கு இத்தண்டனை வழங்கப்பட்டது. அவருடன் மாகெர் என்ற இன்னொரு தோழரும் தூக்கிலிடப்பட்டார். மாகெர் எதற்காகத் தூக்கிலிடப்பட்டாரோ அந்த நிகழ்வைப் பற்றி அவருக்கு ஒன்றுமே தெரியாது என்பதுதான் கொடுமை. அயர்லாந்தின் விடுதலைக்காய் அவர்கள் இருவரும் சாவை மகிழ்ச்சியோடு தழுவிக் கொண்டனர். தூக்கு மேடையிலிருந்து அவர்கள் அனுப்பிய இறுதிச் செய்தி அயர்லாந்து விடுதலைப் போராளிகளின் நெஞ்சங்களில் என்றென்றும் நிலைத்திருந்து அவர்களை வழிநடத்தும்.

இப்பொழுது எங்கள் படை உறுப்பினர் எண்ணிக்கை எட்டாக உயர்ந்தது. அய்வரிடம் துமுக்கி இருந்தது. மூவர் வெறுங்கையினர். நன்கு ஆலோசித்த பின்னர் திட்டத்தைச் சிறிது மாற்றி அமைத்துக் கொண்டோம். சீன் திரேசி, இராபின்சன், ஈமன் ஓ'பிரெய்ன், நான் ஆகிய நால்வரும் அடுத்த நிலையமான நாக்லாங் சென்று அங்கு தாக்குதலை நடத்துவதெனத் தீர்மானித்தோம். எமிலியிலிருந்து தெற்காக மூன்று கல் தொலைவில் நாக்லாங் அமைந்திருந்தது. அதனருகில் காவலர் முகாமோ படை முகாமோ எதுவும் இல்லையென்பதால் அதனைத் தேர்ந்தெடுத்தோம். எங்கள் முயற்சி நாக்லாங்கில் தோல்வியடைந்ததால் அடுத்த நிலையமான பிளார்னேயில் எதிரியோடு மீண்டும் மோதிப் பார்ப்பது என முடிவு செய்து கொண்டோம்.

நாங்கள் நால்வரும் நாக்லாங் செல்ல, மற்ற நால்வரும் எமிலியில் தங்கியிருந்து, தொடர்வண்டிக்குள் ஏறிக் கொள்வது என்பது திட்டத்தின் இன்னொரு பகுதியாகும். அவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

நால்வரும் தொடர்வண்டியில் சீன்கோகன் அழைத்து வரப்படும் பெட்டியைக் கண்டுபிடித்து, வண்டி நாக்லாங் அடைந்தவுடன் எங்களுக்குச் சைகை மூலம் தெரிவிக்க வேண்டும். வண்டியில் வரும் எவருக்கும் எந்த வகையிலும் சிறிதளவு கூட ஐயம் ஏற்படாமல் இதை அவர்கள் செய்ய வேண்டும். இதனால் வண்டி நாக்லாங் நிலையத்திற்குள் நுழைந்தவுடனேயே கண்ணிமைக்கும் நேரத்தில் தாக்குதலை நடத்த முடியும்.

நாக்லாங் நிலையத்தை நாங்கள் சென்றடையவும், எமிலியிலிருந்து வண்டி புறப்பட்டு விட்டதற்கான சைகை கிடைக்கவும் சரியாக இருந்தது. தொடர்வண்டி நிலைய மேடையில் (பிளாட்பார்ம்) வண்டிக்காகக் காத்திருக்கும் பயணிகளைப் போல், பதற்றம் எதுவுமின்றி அமைதியாக நடை பயின்றோம். ஆனால் அதே சமயம் தாக்குதலுக்கு அணியமாய் காலுடைக்குள்ளிருந்த துமுக்கியைக் கெட்டியாகப் பற்றியிருந்தோம். இன்னும் சிறிது நேரத்தில் அங்கு அரங்கேறவிருந்த மயிர்க் கூச்செறியும் நாடகமொன்றிற்குத் தாங்கள் பார்வையாளர்களாக மாறப் போகின்றோம் என்ற உணர்வு சிறிதுமின்றிப் பயணிகள் பலர் வண்டிக்காகக் காத்திருந்தனர். திரைப்பட இயக்குநர் யாராவது அங்கிருந்திருந்தால் திருப்பம் பல நிறைந்த திகில் காட்சிகளைச் செலவேயின்றிப் படமாக்கியிருக்கலாம்.

தொலைவில் வண்டி வருவதற்கு அடையாளமாகப் புகை மேல் நோக்கி எழுவது தெரிந்தது. அடுத்த சில நொடிகளில் வண்டி நாங்கள் நின்றிருந்த மேடைக்குள் நுழைந்தது. அதே சமயம் எதிர் மேடைக்குள் இன்னொரு வண்டி கார்க் திசையிலிருந்து உள் நுழைந்தது. அந்த வண்டியில் டப்ளின் நகருக்கான பிரிட்டன் படையணி ஒன்றிருந்தது. அடுத்த நாள்தான் எங்களுக்குத் தெரிய வந்தது. அவர்களுக்கு நேரெதிரே ஒரு சில அடிகளுக்குள்ளேயே வாழ்வா சாவா போராட்டம் நடைபெற்றிருக்கிறது. ஆனால் அதில் ஏன் அவர்கள் பங்கு பெறவில்லை என்பதை என்னால் இதுவரை அறிந்து கொள்ள முடியவில்லை. ஒரு வேளை எதிரே நடப்பதென்ன என்பதை அவர்கள் அறிந்து கொள்வதற்கு முன்னரே எல்லாம் நடந்து முடிந்து போயிருக்கலாம்.

எங்களுடைய வண்டி மேடைக்குள் நுழைந்து நிற்பதற்கு முன்னரே எங்களுக்கு வேண்டிய சைகை இரு இடங்களிலிருந்து இரு தனித்தனி குழுக்களால் கிடைத்து விட்டது. தர்லெஸ்ஸில் வண்டி புறப்படும் போது சீன் கோகன் உள்ள பெட்டியில் அயர்லாந்து குடியரசுப் படை உளவுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் ஏறிக் கொள்வது என்பது எமிலியை நோக்கிப் புறப்படுவதற்கு முன்பே தீர்மானிக்கப்பட்டத் திட்டம். எமிலியில் ஏறிய நால்வருக்கும் இது தெரியாது. எமிலியில் ஏறியவர்களைப் பற்றி தர்லெஸ்ஸிலிருந்து வருபவருக்கு எதுவும் தெரியாது.

சீன் கோகனுடைய பெட்டி நீளமானதாக இருந்தது. அது பன்னிரண்டு சிறிய அறைகளைக் கொண்டிருந்தது. எல்லா அறைகளுக்கும் செல்லும்படியான பாதையொன்றும் அமைந்திருந்தது. அந்தப் பாதையில் எங்களது காவ்ட்ட வீரர்கள் நின்று கொண்டிருந்தார்கள். சீன் கோகன் உள்ளிருந்த அறைகளில் ஒன்றில் விலங்கிடப்பட்ட நிலையில் அமர்ந்திருந்தான். அவனது ஒரு புறத்தில் காவலர் தலைவர் ஒருவரும், இன்னொரு புறத்தில் காவலர் ஒருவரும் அமர்ந்திருந்தனர். எதிர்ப்புறத்தில் இரு காவலர்கள் அமர்ந்திருந்தார்கள். நால்வரும் நிறைஆயுதபாணிகளாய் இருந்தனர்.

எங்களுக்கு ஒரு நொடியைக் கூட வீணாக்க நேரமில்லை. தொடர்வண்டி அங்கு ஓரிரு நிமையங்களே நிற்கும். தாக்குதல் தலைவன் சீன் திரேசியிடமிருந்து ஆணை பிறந்தது. சீன் கோகனின் பெட்டிக்குள் புயலென நுழைந்தோம். கண்ணிமைக்கும் நேரத்திற்குள், காவலர்கள் முன் தோன்றி, "சரணடையுங்கள்!" எனக் கட்டளையிட்டோம். சற்று நேரத்திற்கு முன்னர்தான் காவலர் தலைவன் வாலேஸ் (Wallace) பிரீனும், திரேசியும் எங்கேயென்று கேட்டு கோகனை அடித்து மிரட்டியிருக்கிறான். இதை நாங்கள் பின்னர் அறிந்து கொண்டோம். அவனது கேள்விக்கு விடை கிடைத்து விட்டது. பிரீனும் திரேசியும் அவன் முன்னே நின்று கொண்டிருந்தார்கள், துமுக்கிகளை ஏந்தியவாறு!

காவலர்களுக்கு எல்லாம் புரிந்து விட்டது. அடுத்த நொடி காவலன் என்ரைட்டினுடைய துமுக்கி கைதி கோகனின் காதினை உரசியவாறு உயர்ந்து நின்றது. கைதியை விடுவிக்க முயற்சி நடந்தால், கைதியைச் சுட்டுப் பிணமாக்கும்படியும் ஆணை பிறந்தது. காவலன் என்ரைட்டினுடைய கைவிரல் துமுக்கியின் விசையை இழுக்க அசைந்தது. காவலன் பிணம் அல்லது கோகனின் பிணம்! காவலன் கைவிரல் விசையை அழுத்தும் முன்னரே அவனது நெஞ்சாங்குலையில் சரியாகப் பாய்ந்தன குண்டுகள். அவன் அப்படியே சரிந்து பிணமானான்.

அடுத்து அங்கு நடந்த நிகழ்வுகளுக்கு ஈடாக எந்த அதிரடித் திரைப்படக் காட்சிகளையும் ஒப்பிட முடியாது. பயணிகள் எங்கள் நோக்கத்தைத் தெரிந்து கொண்டனர். எங்கும் ஒரே கூச்சல்! குழப்பம்! அத்துணைக் குழப்பங்களுக்கும் பதட்டங்களுக்குமிடையில், நான் கண்ட ஒரு காட்சி இன்னும் என் மனத்தில் அப்படியே பசுமையாக உள்ளது. காக்கிச் சீருடையில் பயணியாக அமர்ந்திருந்த படைவீரர் ஒருவர். அவரது உடைதான் இங்கிலாந்து காக்கியாக இருந்தது. உடலில் ஓடிய அரத்தமோ அயர்லாந்து அரத்தம். "அயர்லாந்துக் குடியரசு ஓங்குக! வெற்றி நமதே!" என்று தமது தொப்பியை உயர்த்தி ஆட்டியவாறே அவரிட்ட முழக்கம் இன்னும் என் காதுகளில் ஒலிக்கிறது; அவர் முகம் முழுவதும் வெளிப்பட்ட அந்த வெற்றி மகிழ்ச்சியை என்னால் என்றும் மறக்கவே முடியாது.

எங்களது முதற்குண்டு காவலன் என்ரைட்டைச் சாய்த்ததைக் கண்ட இன்னொரு காவலன் சன்னலின்



படிப்பகம்

www.padippakam.com

வெளியே தாவிக் குதித்துத் தப்பி ஓடினான். அவனை மறுபடியும் நாங்கள் பார்க்கவே இல்லை. அவன் வெறி பிடித்தவனைப் போல் கத்திக் கொண்டே ஓடியதாகவும், நடந்த சண்டையைப் பற்றி அடுத்த நாள் காலை எமிலி காவலர் முகாமில் உளறிக் கொட்டியதாகவும் பின்னர் கேள்விப்பட்டோம்.

இப்பொழுது அங்கே மிஞ்சியிருந்தது காவலர் தலைவன் வாலேசும், காவலன் ரெய்லியும்தான். சரமாரியான குண்டுகள் காவலர் பக்கமிருந்தும் எங்கள் பக்கமிருந்தும் மாறிமாறிப் பாய்ந்தன. காவலன் ரெய்லி நெடுஞ்சாணாக விழுந்தான். அவனிடம் அசைவொன்றையும் காணோம். அவன் கதை முடிந்தது என நாங்கள் நினைத்தோம். ஆனால் அவன் பாசாங்கு செய்துள்ளான் என்பது பின்னர்தான் தெரிந்தது.

காவலர் தலைவன் வாலேஸ் கடைசி வரை போரிட்டான். உண்மையிலேயே அவன் ஒரு மிகச் சிறந்த போர் வீரன்தான். எதிரிகளணியில் அவனைப் போன்ற ஒரு போர் வீரனைப் பின்னர் நான் பார்க்கவே இல்லை. தனது தோழர்களால் கைவிடப்பட்ட நிலையிலும், நாங்கள் பலமுறை எச்சரித்தும் அவன் சரணடைய மறுத்தான்.

அங்கு அப்பொழுது நிலவிய குழப்பத்தையும் பீதியையும் என்னால் முழுமையாக எடுத்துரைக்க இயலவில்லை. பாதுகாப்பாக மறைந்து கொண்டு சண்டையிட அங்கு இடமில்லை. பயணிகள் அங்கும் இங்கும் சிதறி ஓடிக் கொண்டிருந்தனர். குண்டுகளும் மாறிமாறிச் சீறிக் கொண்டிருந்தன. யார் எங்கிருந்து சுடுகிறார்கள் என்பதே தெரியாமல் போயிற்று. எதிரியின் குண்டுகளுடன் பாய்ந்து வரும் தோழர்களின் குண்டுகளிலிருந்தும் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நிலை.

குண்டுகளிடமிருந்து தப்பித்துக் கொண்டே தொடர்ந்து விடாமல் சுடுதாக்குதலை நடத்தியவாறே கைவிலங்கிடப்பட்ட சீன் கோகனைப் பாதுகாப்பாகப் பெட்டியின் வாயிலை நோக்கி நகர்த்தினோம். ஒரு சில நொடிகளுக்குள் கோகன் வெளியேற்றப்பட்டு பத்திரமாக அழைத்துச் செல்லப்பட்டான்.

இப்பொழுது, சண்டை நிலைய மேடைக்கு மாறியிருந்தது. ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்தேன். காவலர் தலைவன் வாலேசும் மேடைக்கு வந்து விட்டான். தோழர்களைப் பார்த்தேன். திரேசி, ஓ' பிரெய்ன், ஸ்கேன்லான் ஆகிய அனைவரும் அரத்தம் சொட்டச் சொட்ட நின்று கொண்டிருந்தனர். அவர்களது கைகளில் துமுக்கிகளைக் காணோம். பெட்டிக்குள் நடந்த சண்டையில் அவர்கள் அவற்றை இழந்திருந்தனர்; சண்டையிடும் நிலையில் நான் மட்டுமே இருந்தேன். என்னுடம்பிலும் குண்டு பாய்ந்திருந்தது. ஆனால் அது எந்த இடத்தில், காயம் எத்தகையது என்பதை அப்பொழுது உணரும் நிலையில் நானில்லை. நுரையீரல் பக்கம் சிறிது வலி மட்டும் தெரிந்தது.

நிலைய மேடையில் ஊக்கம் சிறிதளவும் குன்றாத காவலர் தலைவன் வாலேசுடன் காவலன் ரெய்லியையும் நான் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இறந்து விட்டதாக நாங்கள் நினைத்த ரெய்லி ஒரு பக்கமாய் நின்று தொடர்ந்து சுட்ட வண்ணம் இருந்தான். அவனது குண்டொன்று துமுக்கி ஏந்திய எனது வலது கையைச் சரியாகப் பதம் பார்த்தது. துமுக்கி கீழே நழுவியது. விரைந்து துமுக்கியை இடது கையால் பற்றிச் சுடத் தொடங்கினேன். வலது கையைப் போலவே எனது இடது கையும் சரியாகக் குறிபார்த்துச் சுடும். எந்தச் சூழ்நிலையையும் எதிர்கொள்ளவே அவ்வாறு நான் பயிற்சி பெற்றிருந்தேன். இப்பொழுது அது கைகொடுத்தது.

மீண்டும் எனது துமுக்கி தன்னைக் குறிபார்ப்பதைக் கண்ட ரெய்லி திரும்பி தலைதெறிக்க ஓடத் தொடங்கினான். ரெய்லி மட்டும் அவனது தலைவன் வாலேசைப் போல வீரம் செறிந்தவனாகவும், விரைந்து இயங்கக் கூடியவனாகவும் இருந்திருந்தால், என் கையிலிருந்து துமுக்கி நழுவிய அக்கணப் பொழுதே என் மூளை சிதறிப் போயிருக்கும். ஆனால் அவனோ உயிர் பிழைத்தால் போதுமென்று ஓடிக் கொண்டிருந்தான். என் கண்ணை அரத்தம் மறைக்காதிருந்தால் அவன் தப்பித்திருக்க முடியாது; என் குறி தவறி விட்டது.

இதுவரை தாக்குப்பிடித்த காவலர் தலைவன் வாலேசும் நிலைதடுமாறி மேடையில் அப்படியே சாய்ந்து விழுவதைக் கண்டேன். தொடர்வண்டி நிலையப் போர் முடிவுக்கு வந்தது. சீன்கோகன் மற்றத் தோழர்களுடன் எப்பொழுதோ அவ்விடத்தை விட்டு மறைந்து போயிருந்தான். வெற்றி! வெற்றி! முழு வெற்றி!

(மீண்டும் சந்திப்போம்)

## பாவலரேறு தமிழ்க்களத் தொடக்க விழா

பாவலரேறு தமிழ்க்களத் தொடக்க விழா மற்றும் பாவாணர் நூற்றாண்டு விழா சென்னை மேடவாக்கத்தில் பாவலரேறு பெருஞ்சித்தரனார் ஐயா அவர்கள் விதைக்கப் பெற்ற இடம் - தமிழ்க்களமாக உருவாகி செயல்முனைப்புடன் நடைபெறும் முகமாகப் பாவலரேறு தமிழ்க்களம் தொடக்க விழ தி.பி.2033 - சுறவம் 6ஆம் நாள் (19.01.2002) நடைபெற்றது. விழா அடுத்த நாளும் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்றது.

திருவாட்டி தாமரை பெருஞ்சித்தரனார் தலைமையில் நடைபெற்ற விழாவில் திரு பழ. நெடுமாறன் (தமிழர் தேசிய இயக்கம்), தோழர் பெ. மணியரசன் (தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி), தோழர் தியாகு (தமிழ் தமிழர் இயக்கம்) உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினர். ▣



படிப்பகம்

www.padippakam.com

நூல் திறனாய்வு:

# மலைகளைத் தவிரவும் எமக்கு நண்பர்கள் இல்லை

## சமகால குர்திஸ் கவிதைகள்




குர்திஸ் மக்கள் பல நூற்றாண்டுகளாகப் பலருக்கு அடிமைப்பட்டு, புவி எங்கும் சிதறடிக்கப்பட்டு அகதிகளாக வாழ்ந்து வரும் ஒரு தேசிய இனம். அவர்கள் நாடும் மொழியும் இனமும் பண்பாடும் அழிக்கப்பட்டதை வேதனையுடனும் துயரத்துடனும் ஏக்கத்துடனும் வெளிப்படுத்தும் படைப்புகளே இந்தச் சமகாலக் குர்திஸ் கவிதைகள். இக்கவிதைகளைப் படைத்த கவிஞர்கள் இன்று பல நாடுகளில் அகதிகளாய் இருக்கிறார்கள். அவர்கள் எந்த நாட்டில் இருந்த போதும் சுதந்தரக் குர்திஸ்தான் அமைய வேண்டும் எனும் கனவுடன் வாழ்கிறார்கள். துன்பத்திற்கும் சாவிற்கும் நடுவில் குர்திஸ் மக்கள் தமது நாட்டை உயிருடன் வைத்திருப்பதைக் கவிதையில் வடிக்கிறார்கள்.

இந்நூலாசிரியர் குர்திஸ்தான் பற்றி நமக்கு அறிமுகம் செய்கிறார். 1988இல் அதிபர் சதாம் உசேனின் இராக்கிய அரசு இராக்கிய குர்திஸ் பிரதேசங்களில், ஹஸ்ஜா எனும் நகரில் இரசாயன வாயுத் தாக்குதல் நடத்தியது. ஒரே இரவில் 5,000 குர்திஸ் மக்கள் மடிந்தனர். இத்துயரத்தை 5,000 ஓவியங்களாக வடித்துள்ளார் குர்திஸ்தான் ஓவியர் ரேப்வோர். அவற்றில் சில ஓவியங்களே இந்நூல் முகப்பை அலங்கரிக்கின்றன.

துருக்கி, ஈரான், இராக், சிரியா, ஆர்மீனியா எனப் பல்வேறு நாடுகளின் ஆளுகைக்குட்பட்டுள்ளதால் குர்திஸ்தான் ஒன்றுபட்ட ஒரு சுதந்தரப் போராட்டத்தை நடத்த முடியவில்லை. ஈரான் மற்றும் இராக் நாட்டு குர்திஸ் மக்கள் தத்தமது ஆட்சியாளர்களோடு மோதும் போது இராக்கிய உசேனும் ஈரானிய கொமேனியும் அச்சூழலைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களை அழிக்கின்றனர். இரு நாட்டு குர்திஸ் மக்களை இரு நாட்டு அதிபர்களே அழிக்கும் அவல நிலை! அதிபர்களுக்கு குர்திஸ் மக்கள் பகடைகளாய் இருக்கிறார்கள். துருக்கி, ஈரான், இராக் போன்ற நாடுகள் நேரடியாகக் குர்திஸ் மக்கள் மீது அடக்குமுறையை ஏவி விட்டதில் இதுவரை 75 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

வரலாறு முழுக்க அடிமைப்பட்டுக் கிடக்கும் குர்திஸ்தானின் விடுதலைக்காக குர்திஸ் விடுதலை இயக்கம் போராடுகிறது. அதன் தலைவர்தான் அப்துல்லா ஓசலான். அவர் மார்க்சிய-லெனினியக் கருத்தியலின் அடிப்படையில் குர்திஸ் தொழிலாளர் கட்சியை நடத்தி வருகிறார்.

1998இல் சிரியாவிலிருந்து வெளியேற்றப்பட்ட அப்துல்லா ஒசலான் கென்யாவில் கிரேக்கத் தூதரகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அமெரிக்கா ஒசலானைப் பயங்கரவாதி என்றது; குர்திஸ் விடுதலை இயக்கத்தைத் தடை செய்தது. 1999ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் நாள் துருக்கியில் ஒசலானுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அப்துல்லா ஒசலானை ஒரு தனியாளாகத் தீர்மானித்துத் தூக்கிலேற்றப் பார்க்கிறது துருக்கி. ஒசலான் தன்னையும் குர்திஸ் மக்களின் விடுதலைக்கான தன் போராட்டத்தையும் பிரித்துப் பார்ப்பதை வன்மையாக மறுதலிக்கிறார். தன் மீதான விசாரணையைத் தனிப்பட்ட விசாரணையாக மாற்றுவது தலையை விடுத்து முண்டத்தை மட்டும் பிரித்துப் பார்ப்பதற்கு ஒப்பாகும் எனச் சாடுகிறார். "தேசத் துரோகம் என்கிற குற்றச்சாட்டை மறுக்கிறேன். நாட்டின் ஒற்றுமைக்காகவும் சுதந்தரத்துக்காகவுமே நான் போராடியதாக நம்புகிறேன். எனது போராட்டம் ஒரு சனநாயகக் குடியரசு அமைப்பதற்குத்தானே தவிர அதற்கு எதிராக அன்று. தேசத்தின் எதிர்காலம் அமைதியில் தங்கியுள்ளதேயல்லாமல் போரில் அல்ல" என்கிறார் ஒசலான்.

குர்திஸ் மக்களின் இந்தத் துயர வரலாற்றையும் விடுதலைப் போராட்டத்தையும் அறிமுகம் செய்கிற நூலாசிரியர் மரண தண்டனைக்கு எதிராக காந்தி முதல் கிருஷ்ணய்யர் வரை நடத்தியுள்ள போராட்டங்களைத் தொகுத்து வழங்குகிறார். நோபல் பரிசு பெற்ற வங்கப் பொருளியலாளர் அமர்த்தியா சென்னுக்குள்ள மனித உரிமை உணர்வுகளையும் பதிவு செய்துள்ளார்.

குர்திஸ்தான், அதன் மீதான அடக்குமுறை, அம்மக்களின் இடப்பெயர்வு, அவர்களின் ஏக்கம் ஆகியவற்றை வெளிப்படுத்தி எழுதப்பட்டுள்ள கவிதைகளைச் சிறப்பாக மொழிபெயர்த்துக் கொடுத்துள்ளார் யமுனா. அருமையான புதுக் கவிதைகள்! பன்னிரு கவிஞர்களின் 26 கவிதைகள் நூலில் இடம்பெற்றுள்ளன.

இவற்றுள் கேள்விக் கணைகளோடு தொடங்கும் ஒரு கவிதை கவிஞனின் ஏக்கத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது:

*குர்துக்கள் யாரெனத் தெரியுமா என்*
*நண்பனே*
*அந்தக் கருமம் உனக்கெதற்கு*
*அதைப் பற்றி நீயேன் கவலைப்பட*
*வேண்டும்?*
*உனக்கு குர்திஸ்தான் எங்கே*
*இருக்கிறதென்று தெரியுமா?*

இப்படி வினாத் தொடுத்துத் தொடங்கும் இக்கவிதை இவ்வாறு முடிகிறது:

*குர்திஸ் மக்கள் பற்றி*
*குர்திஸ்தான் பற்றி தேடிப் பார்*
*பிற்பாடு உனது மனசாட்சியைக் கேள். இந்த*
*உலகில்*
*திமிங்கிலங்கள் போல் ஏரிகளைப் போல்*
*அவர்களுக்கும் வாழ உரிமையில்லையா*
*என்ன?*

நீ உன் பியரைக் குடி; கால்பந்தாட்டம் பார்; தொலைக்காட்சி பார்; மகிழ்ச்சியாயிரு. உனக்கு எப்போது இவையெல்லாம் சகிக்க முடியவில்லையோ, அப்போது எம் தேச மக்களின் சித்திரவதையை எண்ணிப் பார் என்கிறது இக்கவிதை.

இது குர்திஸ் கவிதைகள் என்று தலைப்பிட்டு வந்தாலும் சமகாலத்தில் ஈழத்தில் நடைபெறும் போராட்ட உணர்வை எதிரொலிப்பதாகவும் அமைந்திருக்கிறது. இக்கவிதைகள் உண்மையில் நம்மைப் பார்த்துக் கேள்வி கேட்பது போலவே உள்ளன!

மரணத்தைத் தழுவ அணியமாய் இருக்கும்



படிப்பகம்


www.padippakam.com

குர்துக்கள் குர்திஸ்தானுக்கு ஒரு கொடி கிடைக்கும் வரை, உண்மை எல்லைகள் கிடைக்கும் வரை, குர்திஸ் குழந்தைக்கு வீடும் இல்லை என்ற செய்தியைச் சொல்கிறது ஒரு கவிதை.

இந்த யுகத்தின் மிகப் பெரிய பொய் எது தெரியுமா? முழு உலகமும் உன்னுடையது எனும் அம்மணப் பொய்தான் என்கிறது ஒரு கவிதை.

ஸகின் சோரக்ளி என்ற கவிஞர் கேட்கிறார்:

ஏன் கல்லறைகள், என் தாயே ஏன் கல்லறைகள்?
அவள் பதில் சொன்னாள்
என் மகனே
குர்திஸ்தான் கல்லறைகளில்தான் வாழ்கிறது



சமகாலக் குர்திஸ் கவிதைகள் நமக்கு குர்திஸ்தானை அறிமுகம் செய்கின்றன. அம்மக்களின் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக நமக்கு அரசியல் கற்றுத் தருகின்றன.

அப்துல்லா பெஸூ என்ற கவிஞர் 'அடையாளமற்றப் போராளி' என்ற தலைப்பில் எழுதிய கவிதை உண்மையில் நம் கண்களில் நீர் ததும்பச் செய்கிறது:

நாளை வெளிநாட்டுத் தூதுக் குழு ஒன்று குர்திஸ்தானுக்கு வந்து அடையாளமற்றப் போராளியின் சமாதி எங்கே எனக் கேட்டால், நான் சொல்வேன்; இந்தத் தேசத்தின் ஒவ்வோர் ஆற்றின் கரையிலும், ஒவ்வொரு மசூதியின் திண்ணையிலும், ஒவ்வொரு தேவாலயத்தின் கதவின் முன்பும், ஒவ்வொரு குகையிலும், குன்றுகளின் ஒவ்வொரு கல்லிலும், தோட்டத்தின் ஒவ்வொரு மரத்தின் மீதும், பூமியின் ஒவ்வோர் அடி மண்ணிலும்...நீங்கள் நிற்கும் இடத்திலிருந்து கொஞ்சம் குனியுங்கள், உங்கள் பூங்கொத்தை அங்கே வையுங்கள் போதும்.

குர்திஸ்தான் மக்களுக்கு மலைகளைத் தவிரவும் நாம் நண்பர்களாவோம்.

[மலைகளைத் தவிரவும் எமக்கு நண்பர்கள் இல்லை
*-சமகால குர்திஸ் கவிதைகள்-*
*அறிமுகமும்*
*தொகுப்பும்*
*மொழியாக்கமும்*
*-யமுனா ராசேந்திரன்*

*பக்கம் : 130*
*விலை : ரூ. 50/-*
*வெளியீடு : தாமரைச் செல்வி பதிப்பகம்,*
*31/48 இராணி அண்ணா நகர்,*
*கலைஞர் நகர்,*
*சென்னை - 600 078.]*

**-சிவ. காளிதாசன்.**

# கண்ணகி கோயில்: இன்றைய நிலை

கி.பி. 2ஆம் நூற்றாண்டிலேயே நீதிக்காகப் போராடிய கண்ணகியின் சிலையை இரவோடு இரவாக அப்புறப்படுத்திய தமிழக அரசைப் பல தமிழறிஞர்கள் கண்டித்தும் போராடியும் வருகிறார்கள். தென் தமிழகத்தில் 30 ஆண்டுகளுக்கு மேலாகச் செயல்பட்டு வரும் "மங்கலதேவி கண்ணகி அறக்கட்டளை"யின் தலைவர் இரா. தமிழாதனும் கண்ணகி சிலைப் பிரச்சினையில் அக்கறை செலுத்தி வருகிறார். முதலில் 1975இல் மங்களதேவி கண்ணகி கோட்ட சீரமைப்புக் குழு என ஆரம்பிக்கப்பட்டதே இந்த அறக்கட்டளை. திரு தமிழாதன் கண்ணகி கோயில் பற்றி தெரிவித்த கருத்து:

கண்ணகி கோயில் நிர்வாம் தற்சமயம் எங்களிடம்தான் உள்ளது. கேரள அரசுக்கும் கோயிலுக்கும் எந்த சம்பந்தமுமில்லை. கூடலூரிலிருந்து செல்லும் பாதையைச் சரிபடுத்திக் கொடுத்தால் கேரள அரசு இதில் தலையிடாது. ஆனால் தமிழக அரசின் இயலாமையே இப்பிரச்சினை நீடித்து வருவதற்குக் காரணம். ஒவ்வோர் ஆண்டும் பல விண்ணப்பங்களை அனுப்பிக் கொண்டே இருக்கிறோம்.

கோயில் நிர்வாகச் சீரமைவுக்கான அடுத்த கட்ட நடவடிக்கையாக உச்ச நீதிமன்றம் செல்வதாக உள்ளோம். மத்தியத் தொல்பொருள் கழகம் இதை எடுத்துக் கொள்ள வேண்டும். நிர்வாகம் மத்தியத் தொல்பொருள் கழகத்திற்குச் சென்று விட்டால் இரண்டு அரசும் தலையிட வாய்ப்பில்லை. தஞ்சை பெரிய கோவிலை மத்தியத் தொல்பொருள் எடுத்துச் செப்பனிட்டது போல சேரன் செங்குட்டுவனால் கட்டப்பட்ட இந்தக் கண்ணகிக் கோட்டத்தையும் எடுத்துச் சீரமைக்க வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை. 1975இல் கலைஞர் ஆட்சி இறுதிக் கட்டத்தில் அதற்கான முயற்சி எடுத்தது, ஆனால் நெருக்கடி நிலை வந்த பிறகு அம்முயற்சி கைவிடப்பட்டது. தலைமைச் செயலகத்தில் இதற்கான சான்று உள்ளது. இந்தப் பகுதியில் பதினெட்டாம் கால்வாய்த் திட்டம் நடைபெற்று முடிந்ததும் அதே பொறிஞர்களைப் பயன்படுத்திச் சாலை அமைக்கப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

சந்திப்பு: தோழர் பாலு தென்னவன்.

## தமிழ்த் தேசம்

### காத்திட நன்கொடைகள்

| | ரூ. |
|---|---|
| திரு க. காமராஜ் | 5,000 |
| மேச்சேரியான் | 500 |
| முத்து, சுண்டங்குளம் | 200 |
| சின்னத்துரை, ஆலங்குளம் | 100 |
| பாலு, முக்குச்சாலை, ஆலங்குளம் | 100 |
| கீ.மா. கோதை, சென்னை. | 50 |



படிப்பகம்

www.padippakam.com



# தமிழீழ விடுதலையும் தமிழ்த் தேச விடுதலையும்

*[சிதம்பரத்தில் சென்ற செப்டம்பர் 16ஆம் நாள் நடைபெற்ற தமிழீழ விடுதலை ஆதரவு மாநாட்டில் தமிழர் தன்மானப் பேரவையின் தலைவர் தோழர் ஏ.ஜி. கஸ்தூரி ரெங்கன் ஆற்றிய தொடக்கவுரை]*

அன்புச் சகோதரர்களே! சகோதரிகளே!

இங்கே நடைபெற்றுக் கொண்டிருப்பது ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு; இதனை நடத்துவது தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்புக் குழு; நாம் ஒன்றில் தெளிவாக, உறுதியாக இருக்கிறோம் என்பதை இது பறைசாற்றுகிறது; ஈழத் தமிழர் ஆதரவு என்பது, தமிழீழ விடுதலைக்கு ஆதரவு என்பதும், தமிழீழ விடுதலைப் போருக்கு ஆதரவு என்பதும், அந்தப் போரைத் தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கிற தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு என்பதுமே நமது தெளிவான நிலைப்பாடாகும். தமிழீழ விடுதலைக்கு ஆதரவு என்ற நமது நிலைப்பாட்டிற்கு எதிரானவர்கள் நமக்கு எதிரிகள்; அப்படிப்பட்ட எதிரிகள் தமிழர்களாக இருப்பார்களேயானால் அவர்கள் தமிழினத் துரோகிகள்; அப்படிப்பட்டவர்கள் பிற இனத்தவர்களாக இருந்தால் அவர்கள் தேசிய இன விடுதலையின் எதிரிகளாவர். பொதுவாக, தேசிய இன விடுதலைக்கு எதிரானவர்கள், அவர்களது சொந்த தேசிய இன விடுதலைக்குத் துரோகியாகி விடுகிறார்கள்.

முதல் உலகப் போருக்கு முன்னான சகாப்தம் ஏகாதிபத்திய சகாப்தம். மண்கால் ராட்சதனும், காகிதப் புலியுமான ஏகாதிபத்தியத்தை வீழ்த்திய முதல் உலகப் போருக்குப் பின், இருள் மூழ்கிக் கிடந்த உலகில் தோன்றிய 'செவ்விண்மீன்' எழுச்சியுற்ற தேசிய இனங்களுக்கு நம்பிக்கையூட்டும் வழிகாட்டியாயிற்று. ஒரு கும்பலுக்கு மட்டும் கடமையற்ற எல்லா உரிமைகளும், ஆனால் வெகு மக்கள் திரளுக்கோ உரிமைகளற்ற எல்லாக் கடமைகளும் என்ற அடிமைத்தனத்திற்கு மாறாக, மனிதனை மனிதன் சுரண்டாதிருப்பதுதான் விடுதலை என்பதும், பொது உடைமை, பொதுக் கடமை, பொது உரிமை ஆகிய இம்மூன்றின் ஏற்புண்மை.

இந்த நம்பிக்கை குருட்டுத்தனமான மூடநம்பிக்கையல்ல; மாறாக அறிவியல் நம்பிக்கை. வரலாற்றைப் படைப்பது மக்கள்; அந்த ஈழத் தமிழ் மக்கள் தளத்தின் மீது நின்று, வியூகம் வகுத்து, தன்னிழப்பாளர்கள் பாசறையில் வடிவமைத்து வார்த்தெடுக்கப்பட்ட புலிப்படையை நிர்மானித்து, அப்படையோடு ஒன்றி நின்று தலைமை ஏற்று வழி நடத்தி; எதிரியின் கூடாரத்திற்குள் ஊடுருவி களம் அமைத்து; திட்டமிட்டுக் குறி வைத்து எதிரிகளை வீழ்த்தும், காலத்தால் அடையாளம் காட்டப்பட்ட ஒரு வரலாற்று நாயகனை வழிகாட்டியாகக் கொண்டு விட்ட ஒரு படை தோற்பின், பின் எப்படைதான் வெல்லும் என்று யாராவது கூறட்டுமே?



சுருக்கமாக, தெளிவான பார்வை; வலிவான லட்சியம்; வளமான கொள்கை; பலமான அமைப்பு; தளமாக மக்கள்; களம் காணும் நுட்பம்; விலை கொடுக்கும் வீரர் படை; ஆகிய அம்சங்களின் பிணைப்பில், பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றதல்லவா புலிப்படை. அது கூலிப் பட்டாளம் இல்லை; மாறாக ஒரு லட்சியப் படை. இதனை நாம் குறிப்பிடுவது புலிப்படைக்காக மட்டும் அல்ல, போராட்டத்தின் வடிவம் எப்படியிருந்தாலும், எந்தவொரு போர்க் குணம் கொண்ட அமைப்பிற்கும், இவ்விணைப்பு, இவ்விலக்கணம் அவசியம் என்பதற்காகத்தான் சுட்டிக் காட்டுகிறோம்.

மற்றொன்றையும் இந்த நேரத்தில் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. ஒரு சரியான சித்தாந்தம்தான் ஒரு சரியான செயலுக்கு வழிகாட்டி; அந்தச் செயல் சித்தாந்தத்தைச் செழுமைப்படுத்துகிறது என்ற உண்மை எந்தவொரு செயலுக்குப் பின்னாலும் ஒளிந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டு அந்த அடிப்படையில் தமிழீழ விடுதலைக்கு நாம் அளிக்கும் ஆதரவு, அடிப்படையான, உண்மையான, தகுதியான, பலமுடையதாக அமைந்திடக் கூடும் என்பதைத் தோழமையோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நானும் நான் சார்ந்திருக்கிற தமிழர் தன்மானப் பேரவையும் இந்தியத் தீபகற்ப வரலாற்றுச் சூழலில் செழுமைப்படுத்தப்பட்ட மார்க்சியமே பெரியாரியம் என்ற சித்தாந்தப் பார்வை கொண்டவர்கள். அறிவியல் சித்தாந்தம் அறிவியல் பாடங்களைப் போதித்திருக்கிறது. அதில் சிலவற்றை நினைவுபடுத்திக் கொள்வது, தமிழீழ விடுதலைப் போர், தேசிய இன விடுதலைச் சக்திகளுக்கு அளித்திடும் படிப்பினைகளைப் புரிந்து கொள்ள உதவிகரமாக அமையும்.

சுருக்கமாக, வாழ்க்கைப் பள்ளியில் நாம் ஒவ்வொருவரும் ஆயுட்கால மாணவர்கள் என்ற தன்னடக்கம் இது ஒரு பாடம்.

படிப்பகம்

பிணைப்பால் ஒன்றேயான வடிவம் முழுமையான சுதந்திரம் என்பதும் பறைசாற்றப்பட்டது.

இரண்டாவது உலகப் போருக்குப் பின்னான சகாப்தம், தேசிய இன விடுதலைப் போராட்ட சகாப்தம்; அந்தச் சகாப்தம்தான் இன்னும் தொடர்கிறது. அந்தச் சகாப்தத்தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவே தேசிய இன விடுதலை எழுச்சி என்பது எவராலும், எந்தச் சக்தியாலும், முறியடிக்கப்படவோ, அழித்தொழிக்கப்படவோ முடியாத தேசிய இன மக்களின் பிறப்புரிமையாகவும், பிறவிக் கடனாகவும் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.

இந்தச் சூழலிலும், பின்னணியிலும்தான் தமிழீழ விடுதலைப் போர்க் காலத்தின் கட்டாயத்தால் கருவுற்றது. அது உருப்பெறுவதை, பிறப்பெடுப்பதை, வளர்வதை, வாகை சூடுவதை எந்தவொரு சக்தியாலும் தடுத்து முடமாக்கி விட முடியாது.

ஈழத்தின் வரலாற்றுப் போக்குகள்; ஈழத் தமிழர்களின் வரலாறு; ஈழத் தமிழர்களின் மீதான சிங்கள இன வெறியர்களின் அராஜகம், சிங்கள இனவெறி அரசின் தாக்குதல்; அது மிருக வெறியாக உருவெடுத்தச் சூழல்; அதனால் ஈழத் தமிழர்கள் மீதான சித்திரவதைகள், வன்கொடுமைகள், பாலியல் வதைகள்; ஈவு இரக்கமற்றக் கொலைகள்; பறிக்கப்பட்ட வாழ்வுரிமை; தமிழின அழித்தொழிப்புக் கட்டங்கள்; இவைகளை எதிர்த்து ஈழத் தமிழர்களின் எழுச்சி; அவர்களுக்கு வழிகாட்ட அந்தந்தக் கால கட்டங்களில் ஏற்பட்ட தலைமைகள்; அவர்களின் வழிகாட்டல்கள், ஈழவரலாற்று வளர்ச்சிப் போக்கில் காலத்தால் உருமாற்றம் கொண்ட புலிகளின் படை; அதற்குத் தலைமை தாங்க காலத்தால் அடையாளம் காட்டப்பட்ட தலைவர் தம்பி பிரபாகரன்; அவர் வகுத்தளித்த வியூகங்கள், அவர் ஆணையைத் தலைமேற் கொண்டு தங்களை அர்ப்பணித்துக் கொண்ட இளஞ்சிங்கங்களின் தியாகங்கள்; போன்ற அம்சங்கள் ஒவ்வொன்றும், ஒரு நீண்ட சரித்திரம் கொண்டவை; அதற்குள் சென்று விவரிக்க நான் முயலவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் வலியுறுத்தியாக வேண்டும். தமிழீழ விடுதலை என்பது திடநிச்சயமானது. புலிப் போர்ப் படையின் வெற்றி என்பது வரலாற்றில் தடம் பதிக்கப்பட்டு விட்டது. இது தமிழின உணர்வாளர்களின் நம்பிக்கை. தமிழீழ எதிரிகளின்

நான் தலைவர் சாதி, நீ தொண்டன் சாதி; நான் சகலகலாவல்லவன், நீ நான் சொன்னதைக் கேட்கும் அடிமை; தலைவன் தன் ஆதாயத்திற்குத் தொண்டனைப் பலி கொடுப்பான்; தொண்டன் தலைவனுக்காகத் தற்கொலை கூட செய்து கொள்வான்; போன்ற தனிநபர் வழிபாடு, தனிநபர் துதிபாடல், தனிநபர் மீதான மோகம், ரசனை, மயக்கம், வெறிகள் என்ற அரசியல் சதியிலும், சகதியிலும் சிக்காமல், அமைப்பை நம்பி அங்கம் பெற்று, களத்திற்கு வந்த அனுபவமற்றத் தொண்டனும், அனுபவத்தோடு வழிகாட்டும் மாவீரன் தலைவனும் தோளொடு தோள் இணைந்து, பரஸ்பர நேசம், பரஸ்பர விசுவாசம், பரஸ்பர நம்பிக்கை, பரஸ்பர அக்கறை, பரஸ்பர ஒத்துழைப்பு என்ற பாசப் பிணைப்பில் விடுதலைப் புலிகளால் கலந்து விட முடிகிறது.

மற்றொன்று, நம் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் கற்றலும், கற்பித்தலுமான நாட்கள் என்ற கடமை உணர்வு;

நான் அனைத்தும் கற்றவன், நீ அறியாமையில் கிடப்பவன்; நான் வித்தகன், நீ விதர்ணையற்றவன்; நான் பேசப் பிறந்தவன், நீ கேட்க வந்தவன்; நான் எந்நாளும் மேதை, நீ எந்நாளும் பேதை என்பன போன்ற ஆதிக்க மமதையை அண்ட விடாமல், மக்களிடம் செல்கிறார்கள். கற்றலும், கற்பித்தலுமாகப் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள். அங்கே அடையாளம் காணப்பட்டவர்களோடு அமைப்பிற்குள் வந்து, கற்றலும் கற்பித்தலுமாக தங்களைப் பயிற்றுவித்துப் பக்குவப்படுத்திக் கொண்டு, களத்திற்குப் புறப்பட்டுப் போய் அங்கு சோதனையிலும், வேதனையிலும், கற்றும், கற்பித்தும் விடுதலைப் புலிகளால் சாதனை படைக்க முடிகிறது.

இன்னொன்று, நம்மால் அறிந்து கொள்ள முடியாதது எதுவுமில்லை. ஆனால் அறிந்து கொள்ள வேண்டியதோ நிறைய உண்டு என்ற தன்னம்பிக்கை.

அண்ட சராசரம் அனைத்தும் அறிந்து முடித்து விட்டதான தலைக்கனம், தற்பெருமை, தற்புகழ்ச்சி, தன்னகங்காரம் போன்ற தடிமத் தனங்களில் தங்களை மாட்ட வைத்துக் கொள்ளாமல், அறிய முடியாததொன்றில்லை என சிந்தனையை உசுப்பி விட்டு, அறிய வேண்டியதோ ஏராளம் என முயற்சிகளை முடுக்கி விட்டு, கருத்து, செயல் ஒற்றுமையைக் கட்ட முடிகிறது. சித்தாந்தப் பார்வையற்றச் செயல் குருட்டுத்தனமான முரட்டுச் செயலாகவும், செயலற்ற சித்தாந்தம் திண்ணைப் பேச்சுக்கான வறட்டுச் சித்தாந்தமாகவும்தான் இருக்க முடியும் என்பதிலான தெளிவு, செய்ய முடியாதது எதுவுமில்லை, செய்ய வேண்டியதோ நிறைய இருக்கிறது என்ற உத்வேகத்தையூட்டுகிறது. இந்த உத்வேகம்தான், விலை பேசவும், விலைக்கு வாங்கவும், விலை போகவுமான உடல் வணிக அரசியலை ஒதுக்கித் தள்ளி, விலை போக மாட்டோம், விலை கொடுத்தே வெல்வோம் என்ற உறுதிப்பாட்டை விடுதலைப் புலிகளால் வெளிப்படுத்த முடிகிறது. பிரிதொன்று, நாம் வார்த்தைகளை ஆள வேண்டுமே தவிர, வார்த்தைகள் நம்மை ஆள விட முடியாது என்ற சொல்லாட்சி.

மேடைக் கர்ஜனைகள், சொற்சிலம்பாட்டம், சொற்கூடுகளைப் பறக்க விடல், சொற்ஜாலம், சொற்புரட்டு போன்றவைதான் பேச்சுத்திறன், ராஜதந்திரப் பேச்சு எனக் கூறும் சொல் நையாண்டித் தனங்களை வெறுத்தொதுக்கி எதிரும்புதிருமான வார்த்தைகளைக் கண்டறிந்து விலக்கி, நேர்நிறை எதிர்மறையின் இணைவோடு கூடிய போராளியின் புதிய அகராதியைப் புலிகளால் வெளியிட

– அ.கோ. கஸ்தூரி ரெங்கன் (ஏ.ஜி.கே.) –



www.padippakam.com
படிப்பகம்

முடிகிறது - வேடிக்கையாகச் சொன்னால் வார்த்தைகளை ஈவ் டீசிங், ராக்கிங் செய்யாமல், நா என்ற துப்பாக்கியால் சுடும் சொல் தோட்டாக்களாக வெளிப்படுத்த முடிகிறது.

வேறொன்று; சூழலைப் புரிந்து கொண்டு, அந்தச் சூழலில் தன்னைப் பொருத்திக் கொண்டு அந்தச் சூழலை மாற்றப் போராட வேண்டும் என்ற போர்க் குணம்.

சூழ்நிலையில் சிக்கிக் கொண்டு, தடம் புரண்டு தடுமாறி, சதிகாரர்களாகவும், சந்தர்ப்பவாதிகளாகவும் மாறி, நிலை கெட்டு நிலைகுலைந்து தானும் குழம்பி, மக்களையும் குழப்பி மலிவான பிழைப்பு நடத்தும் அரசியல்தனத்தை வெறுத்தொதுக்கி, சுற்றுச் சார்புகளையும், அதற்கிடையேயான முரண்பாடுகளையும் போராட்டங்களையும், கண்டறிந்து சூழலைப் புரிந்து கொண்டு, அந்தச் சூழலில் தன்னைக் கரைத்துக் கொள்ளாமலும், தனிமைப்பட்டுப் போகாமலும்,



தீபகற்பத்தின் ஒரே தேசிய மொழி இந்தியல்ல; இந்தியத் தேசியம் என்று ஒன்றில்லை. இந்துத்துவவாதிகளும், இந்தியத் தீபகற்பத்தை ஒட்டு மொத்தச் சுரண்டல் காடாக வைத்துக் கொள்ள விரும்புகிறவர்களுமான, பார்ப்பனர்களும் பெருமுதலாளிகளும் திட்டமிட்டுக் கற்பித்து உயிரூட்டி உலவ விட்ட கற்பனை வடிவமே இந்தியத் தேசியம்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கெதிராகக் கிளர்ந்தெழுந்த தேசிய இன விடுதலை எழுச்சிகளை, லாவகமாகப் பயன்படுத்திக் கொண்டு பார்ப்பனத்துவமும், பெருமுதலாளித்துவமும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் நடத்திக் கொண்ட பேரத்தால் ஏற்பட்ட, ஆட்சியதிகார கைமாற்றத்தைத்தான் இந்திய சுதந்திரம் என பிரகடனப்படுத்தினார்கள். ஆனால் உண்மையில் அந்த 47 ஆகஸ்ட் 15 தேசிய இன விடுதலைக்கு எதிரான'புதிய எஜமானர்கள்' பொறுப்பேற்ற நாளாகும். இதைத்தான் தந்தை பெரியார் அவர்கள், ஆகஸ்ட் 15, நமக்குச் சுதந்திர நாள் அல்ல; துக்க நாள்; ஆட்சியதிகாரம் கை மாற்றித் தரப்பட்ட (made over) நாள்; இரும்பு விலங்கு அகற்றப்பட்டுப் பொன்விலங்கு பூட்டப்பட்ட நாள்; வெள்ளையர்கள் போய் கொள்ளையர்கள் ஆட்சிக்கு வந்த நாள் என்று அன்றைக்கே பிரகடனம் செய்தார்கள்.

அந்த இந்தியத் தேசியத்தில் சிக்கி, சிறைப்பட்டு, அடிமைப்பட்டுக் கிடக்கிறது தமிழ்த் தேசியம்; தமிழ்த் தேசத்தையும், தமிழ்த் தேசியத்தையும் சிறையிலிருந்து மீட்டாக வேண்டியது தமிழ் மக்களின் பிறப்புரிமையும், பிறவிக் கடனுமாயிருக்கிறது. இந்த உரிமையையும் கடமையையும் உணர்ந்தவர்களாக தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் இருப்பார்கள்; இருக்கிறார்கள்; இருக்க வேண்டும் என வலியுறுத்துவோம்.

தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்புக் குழு தனது பத்தாம் ஆண்டு விழாவைக் கொண்டாடுவது நமக்கெல்லாம் மகிழ்ச்சியும் உற்சாகமும் ஊட்டுகிறது. இந்தக் குழுவை முன்கை எடுத்துத் தொடக்கி, முன்நின்று செயலாற்றிய அய்யா பழ. நெடுமாறன் அவர்களுக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வோம். இவ்வொருங்கிணைப்புக் குழுவில் பங்கேற்றுள்ள பல்வேறு அமைப்புகளுக்கும் நன்றி சொல்லிக் கொள்வோம்.

இவ்வொருங்கிணைப்புக் குழு தொடங்கப்பட்டு, அது தன்னாலியன்ற வரை தமிழீழ விடுதலைக்காதரவாக ஆற்றிய பணிகள்; எதிர்ப்பட்ட, எதிர்கொண்ட பிரச்சினைகள்; ஏற்றுப் பிரித்துக் கொண்ட வேலைகள்; எதிரிகளால் வீசப்பட்ட சோதனைகள், சவால்கள்; அதனை எதிர்நின்று, எதிர்நீந்தி முன்னேறிய நிகழ்ச்சிகள்; இந்தியத் துணைக் கண்டத்தில் பார்ப்பனுத்துவ, பெருமுதலாளித்துவ நடுவணரசு தேசிய இன விடுதலைப் புரட்சிகளுக்கு, குறிப்பாக தமிழீழ விடுதலைப் போருக்கு எதிராக எடுத்த நிலைகளால் தொடுக்கப்பட்டத் தாக்குதல்; தமிழ் மாநில அரசாங்கங்களால் தரப்பட்ட தொல்லைகள், தொந்தரவுகள், நச்சரிப்புகள், இதற்கெல்லாம் ஈடுகொடுத்து, முன்னோக்கி நகர்ந்த நிகழ்வுகள் போன்றவைகளையெல்லாம் இந்தப் பத்தாமாண்டில் இவ்வொருங்கிணைப்புக் குழு நினைவு கூர்ந்து பெருமை கொள்ள முடியும். அந்த நினைவுகளில் நமது ஆசானான அனுபவம், தனது வெளிச்சத்தில் தெளிவாகக் காட்டும் எதிர்காலப் பாதைகளைப் புரிந்து கொள்ள முடியும். அந்தப் புரிதலில், நாம் தமிழீழ விடுதலைக்களிக்கும் ஆதரவு தகுதியால் முழுமை பெற்றதா? என்ற வினாவிற்கு விடை காண வேண்டியவர்களாக இருக்கிறோம்.

www.padippakam.com
படிப்பகம்

தனித்துவத்தை இழந்து விடாமலும் தன்னைப் பொருத்திக் கொண்டு, அந்தச் சூழலை அடிப்படையாக மாற்றியமைத்து மண் மானத்தையும், இன மானத்தையும் காக்கும் செயல்வீரர்களாக விடுதலைப் புலிகளால் விளங்கிட முடிகிறது.

கடைசியாக, வாழ்வது போராடுவதற்கே, போராடுவது வாழ்வதற்கே என்ற வாழ்நெறிமுறை;

வாழ்வது வாழ்வதற்கே எனக் கூறி, சொத்து சுகத்திற்கும், செல்வாக்கு புகழ் விளம்பரத்திற்கும், பிச்சை எடுத்தலையும் அரசியல் கோமாளித்தனத்தைப் புறக்கணித்து விட்டு, மானம் காக்கும் சரியான வாழ்முறை ஏற்கப்பட்டிருக்கிறது. படைக்கும் திறனை வெளிப்படுத்தி இயற்கையைப் படைத்த 'இருப்பு', தன் பரிமாணத்தின் உச்சக்கட்டமாக மனித வடிவெடுத்தது. அந்த மனித வடிவு மட்டும்தான் தன்னை ஒரு படைப்பாளியாகப் பிரகடனப்படுத்திக் கொண்டது. அந்தப் படைப்பாளி நிச்சமாகப் போராளியாக இருக்க வேண்டும். போராட்டத்தை ரத்த ஓட்டமாகக் கொண்ட போராளியின் வெளிப்பாடே படைக்கும் ஆற்றல் என்பது விடுதலைப் போர்களால் நிரூபிக்கப்பட்டிருக்கும் உண்மையாகும். இதற்கு விடுதலைப் புலிகளும் விலக்கல்ல.

இதுவரை சொல்லி வந்த அறிவியல் பாடங்கள், போர் வடிவம் எதுவாயினும் ஒவ்வொரு தேசிய இன உணர்வாளர்களும் பெற்றிருக்க வேண்டிய குணாம்சங்களைப் போதிக்கிறது. இதனைத் தங்கள் வடிவத்தின் மூலம் வெளிப்படுத்தும் விடுதலைப் புலிகள் தமிழீழ விடுதலைப் புரட்சியின் வெற்றிக்குச் சொந்தக்காரர்களாகி விட்டார்கள். விரைவில் அவர்கள் அமைக்கப் போகும் தமிழீழக் குடியரசுக்கு நாம் இம்மாநாட்டின் மூலம் புரட்சி வாழ்த்துக்களைச் சொல்லுவோம்.

இறுதியாக ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். நாம் தமிழர்கள்; நம் இனம் தமிழினம்; நம் மொழி தமிழ் மொழி; நம் பண்பாடு தமிழ்ப் பண்பாடு; நம் நாடு தமிழ்நாடு; நம் தேசியம் தமிழ்த் தேசியம்; நம் வரலாறு தமிழின வரலாறு. தமிழினம் தமிழ்த் தேசிய இன விடுதலை காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்தியத் தீபகற்பத்தில் தமிழினம் வாழ்ந்தாலும், இந்தியா ஒரே நாடல்ல; இந்தியன் என்பவன் ஒரே இனமல்ல; இந்தியக் கலாச்சாரம் ஒரே இனப் பண்பாடல்ல; இந்தியத்

இன்றைய தேசிய இன விடுதலைப் போராட்ட சகாப்தத்தில், தேசிய இன எழுச்சிகளை ஒடுக்க, ஒழிக்க ஏகாதிபத்தியங்களும், ஏகபோக சரண்டல், ஆதிக்க, இனவெறியர்களின் அரசுகளும் தொடுக்கும் தாக்குதல்களால் தங்களுக்கிடையே நெருக்கம் கொள்வதைப் போல தேசிய இன விடுதலைக்குப் போராடும் சக்திகள், தங்கள் நாடுகளில் வரலாற்றுக் கடன்களை நிறைவேற்றுவதன் மூலம் தானே தங்களுக்கிடையே உறவாலும், உணர்வாலும் நெருக்கம் கொள்ள முடியும். அதுதானே முழுமை பெற்ற பரஸ்பர ஆதரவாக அமையும்.

இந்த வெளிச்சத்தில் பார்த்தால், நாம் தமிழ்த் தேசிய இன விடுதலை உணர்வாளர்கள்; இந்தியத் தேசியத்தால் அடிமைப்படுத்தப்பட்டுக் கிடக்கும் தமிழ்த் தேசியத்தை மீட்க வேண்டியவர்கள்; தமிழ்த் தேசக் குடியரசை நிர்மாணிக்க வேண்டியவர்கள்; அதற்காகத் தமிழ் மக்களைத் திரட்டி தமிழ்த் தேசியப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்ல வேண்டியவர்கள்; இந்த வரலாற்றுக் கடமைகளை நிறைவேற்றுவதற்கான தலை உருவாக வேண்டாமா? உருவாக்கப்பட வேண்டாமா? உருவாக்க முடியாதா? விடை காணப்பட வேண்டி நம் முன் நிற்கும் வினாவல்லவா?

அதற்கான காலம் கனியவில்லை; கருத்துக்கள் இணையவில்லை; சூழல் உருவாகவில்லை என்ற சமாளிப்புக்கு முனையாமல், காலத்தின் கட்டாயத்தைப் புரிந்து கொண்டு நாம் சிந்திக்க வேண்டுமல்லவா?

தேசிய இன உணர்வோடு கூடிய தமிழ்த் தேசியப் பார்வையானாலும், தேசிய இனங்களுக்குச் சுயநிர்ணயம் என்பது அவ்வினம் தனக்கென ஒரு நாடு பெறுவதே எனக் கூறிய லெனினது மார்க்சியப் பார்வையானாலும், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று முப்பதுகளில் தொடங்கி, 'சுதந்தரத் தமிழ்நாடு எனது இலட்சியம்' என மரணப் பிரகடனம் செய்த தந்தை பெரியாரின் சிந்தனைப் போக்கான பெரியாரியப் பார்வையானாலும், நோக்கத்தில் ஒரு முனைப்படும் போது, தமிழ்த் தேசியப் புரட்சிக்கு வழிகாட்டும், வழி நடத்தும் ஒரு கூட்டுத் தலைமையாக ஒரு தமிழ்த் தேசிய முன்னணியை உருவாக்க முடியாதா? அத்தகைய முன்னணிக்கு முன்னோடியாக, முன்னேற்பாடாக, முன்தொடக்கமாக, பத்தாண்டு அனுபவமுள்ள, தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்புக் குழு, தமிழ்த் தேச விடுதலை ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்புக் குழுவாகப் பரிணாமம் பெற சாத்தியங்களில்லையா?

இந்த வினாக்களுக்கு விடை காணும் நோக்கில், இந்தத் தொடக்க அரங்கத்தையொட்டி, தொடர்ந்து நடைபெறவிருக்கின்ற, கருத்தரங்கம், இசையரங்கம், சிறப்பரங்கம் ஆகியவை தனது உணர்வுகளை வெளிப்படுத்தும், அவ்வுணர்வுகளுக்கு இறுதியாக, தீர்மான அரங்கம் வடிவம் தரும் என்ற நம்பிக்கையோடு இவ்வேண்டுகோளைத் தோழமையோடும் முன்வைக்கிறேன்.

இங்கு கூடியுள்ள தமிழ்த் தேசிய உணர்வு கொண்ட நாமெல்லாம், தன்னறிவு கொண்ட தன்னம்பிக்கையாளர்கள்; தன்னுறுதி கொண்ட தன்மானிகள்; தன்னடக்கமுள்ள தன்னிழப்பாளர்கள்; நமக்கு ஓய்வில்லை; பயமில்லை; மூப்பில்லை; சாவில்லை; வாழும் நாளில் வரலாறு படைப்போம், மறைந்த பின் வரலாற்றில் வாழ்வோம் என்ற தன்னூக்கமுள்ளவர்கள்; இந்த உறுதியோடு தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்புக் குழு நடத்தும் இந்த எழுச்சி மாநாடு, விடை காணட்டும்! விதைக்கட்டும்! வெல்லட்டும் என வாழ்த்தி முடிக்கிறேன்.

செவ்விண்மீன் வாழ்த்துக்கள்! வணக்கங்கள்!



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# பெண்ணியம் - ஒரு பார்வை!

சு.கு. பன்னீர்செல்வம்

[விரிவுரையாளர்]

இந்து மதப் பழமைவாதத்தை எதிர்த்துச் சுதந்தரமான வாழ்க்கை நடத்திக் காட்டி பெண்ணுரிமைக்காகப் போராடிய முதல் பெண்மணி பண்டித இரமாபாய். இவரைப் பற்றி உலகம் அதிகம் அறிந்திருக்கவில்லை. '*மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்*' - என்றுரைத்த பாரதியையும், அவரது பெண்ணியச் சிந்தனைகளையும் மறந்து விட்டோம். சமூகச் சீர்திருத்தவாதியான இராஜராம் மோகன்ராய் சதி - உடன்கட்டை ஏறுதல், பெண்ணடிமைக்கு முதல் படி என்றுரைத்ததையும் மறந்து விட்டோம். இங்கு மட்டுமல்லாது பெண்ணுலகமெங்கும் பெண்களுக்கெதிரான செயல்கள் அன்று முதலே தொடர்கின்றன.

அடிமை ஒழிப்பு பற்றிய உலக அளவிலான மாநாட்டில் அமெரிக்காவைச் சேர்ந்த பெண் பேராயர்கள் கலந்து கொள்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டதற்குப் பின்னர்தான் அங்கே கூட பெண்கள் போராட்டம் வலுவடைந்தது. எகிப்து நாட்டில் அகமது ஃபெயார் - எல் சிட்யாக் என்பவர் பெண்ணடிமைக்கு எதிரான '**கால்மேல் கால்**' என்ற நூலினை 1885இல் எழுதினார். சீனாவில் ஹாங்யூ- வெய் (1850-1927) என்பவர் பெண்களின் பாதக்கட்டுகளை எதிர்த்ததோடு, ஆண்களுக்குக் கீழ்ப்படிந்து பெண்கள் நடக்க வேண்டும் என்ற நடைமுறையை எதிர்த்தார்.

இந்து மதத்தில் - இந்தியாவில் மட்டுமல்லாது உலகளவிலே பெண்ணடிமைக்குப் பெரிய அளவிலான தடைக்கற்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இது இந்தியாவில் - இந்து மதத்தில் சற்று அதிகமாகவே இருக்கிறது.

## கிறித்துவத்தில் பெண்மை:

இந்தியப் பெண்களை ஒடுக்குவதில் கிறித்துவத் தலைமையும் சளைத்தது அல்ல. 1868, 1897 ஆகிய ஆண்டுகளில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் கிறித்துவர்களுக்காக இயற்றப்பட்ட இந்தியக் கிறித்துவத் திருமணச் சட்டமும், இந்தியக் கிறித்துவ மணவிலக்குச் சட்டமும் இன்றுவரை விடுதலை பெற்ற இந்தியாவில் நடப்பிலிருக்கும் சட்டமாக இருந்து வருகிறது. இந்தியக் கத்தோலிக்க ஆயர் திருப்பேரவை இச்சட்டங்களைத் திருத்த தடை விதித்து வருகிறது. திருமணம் என்பது சாகும் வரையிலான நிரந்தர ஏற்பாடு என்று திருப்பேரவை கூறுகிறது. குறிப்பாக மணவிலக்கு தொடர்பான சட்டப் பகுதியை அது ஏற்க மறுக்கிறது. திருப்பேரவையின் மறுப்பை அரசு மறுப்பதற்குப் பதிலாக ஏற்றுக் கொள்வதன் மூலம் பெண் ஒடுக்குமுறையில் அரசும் பங்கெடுத்துக் கொள்கிறது. கிறித்துவப் பெண்ணுக்குக் கணவனின் வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்கே மனைவிக்கான வாழ்வீடு (ஜீவனாம்சம்) என்கிறது ஆங்கிலேயர்களால் 1868இல் கொண்டுவரப்பட்ட இச்சட்டம்.

## இசுலாமிய நெறியில் பெண்கள்:

முசுலீம்களின் பலதார மணமுறை ஒன்றே பெண்ணடிமையின் உச்ச நிலைக்கு உதாரணம்! இதை விடக் கொடுமை, கணவன் ஒருவன் சினமாக இருக்கும் போதோ, குடிபோதையில் உள்ள போதோ கூட ஒரே மூச்சில் மூன்று முறை தலாக், தலாக், தலாக் என்று கூறி விட்டால் அது மணவிலக்காகி விடும்! இது மத வழிப்பட்டக் கருத்து. இதை விடவும் மோசமான கொடுமை ஒரு பெண்ணுக்கு வேறு இருக்க முடியுமா? இதை முசுலீம் அறிஞர்கள் பலர் ஏற்க மறுத்தாலும் இந்திய முசுலீம் மதச் சட்டமாகவும் முசுலீம் மதச் சட்டத்தை ஏற்றுக் கொண்ட அரசுச் சட்டமாகவும் இருக்கிறது. இப்பெண்களைப் பொறுத்த வரையில் 'வாழ்வீடே இல்லை' என்கிறது இவர்களது மதச் சட்டம். இதுவே அரசியல் காரணங்களுக்காக இந்தியாவில் சட்டமாகவும் இருக்கிறது! பாகிஸ்தானில் கூட பலதார மணமுறை தடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் இரண்டாவது திருமணத்திற்கு நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றாக வேண்டும். ஆனால் இந்திய முசுலீம் மதத் தலைமையோ பாழாய்ப் போன இந்தப் பழக்கவழக்கங்களுக்கு மத அர்த்தம் கற்பித்து வருகிறது!

## பெண்களுக்கு எதிரான சனாதனம் - இந்து மதம்!

பழம் பெருமை கொண்ட இந்தியப் பண்பாடு தெய்விக உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருக்கிறது என்பதை அடையாளம் காட்ட வேகமாக முயற்சிகள் நடக்கின்றன. இந்துச் சமுதாயம் பன்மடிப் படிநிலைகளைக் கொண்ட சாதிகளைக் கொண்டது. சாதிகளின்றிச் சனாதன மதம் எனப்படும் இந்து மதமில்லை. பெண்களின் அறிவிற்கும் ஆற்றலுக்கும் பெரும் தடையாகக் கூட்டுக் குடும்ப வாழ்க்கையும், சாதிய ஒழுங்கும் இருந்து வருகிறது. பெண்கள் சாதி எல்லைகளைத் தாண்டினால் சாதிகள் ஒழிந்து போகும்! சாதிகள் ஒழிந்தால் சமத்துவம் ஏற்பட்டு சாதி ஆதிக்கங்கள் தகர்ந்து போகும்! "*குல நாசத்தினால் தொன்று தொட்டு வருகின்ற குலதர்மங்கள் அழிந்து விடுகின்றன. தர்மம் அழிந்த பிறகு, குலம் முழுவதிலும் அதர்மம் வெகுவாகப் பரவுகிறது. அதர்மம் அதிகமாகப் பெருகுவதால் குலப் பெண்கள் நடத்தை கெட்டுப் போவார்கள். நடத்தை கெட்டுப் போனால் வர்ணக் கலப்பு உண்டாகி விடுகிறது*" என்கிறது இந்துக்களின் புனித நூல் பகவத் கீதை!

இந்து மதமும், அதனின் சட்ட நூலாகிய மனுதர்மமுமே "*தந்தை எவரிடம் ஒப்படைக்கிறாரோ அல்லது தந்தையின் அனுமதியின் பேரில் தமையன் எவரிடம் ஒப்படைக்கிறானோ அவருடன் அவள் சாகும் வரை அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்*" என்றும், "*பெண்களால் நடத்தப்படும் வேள்விகள் அமங்கலமானவை; அவை கடவுள்களால் ஏற்றுக் கொள்ளப்படா*" என்றும் கூறி அனைவருக்கும் பொதுவான கடவுள்களே தம் மக்களைத் தரம் பிரிக்கின்றன! "*மனைவி, மகள் சொத்து வைத்திருக்கக் கூடாது. அவர்கள் சம்பாதிக்கும் பொருள் அவர்கள்*



படிப்பகம்

www.padippakam.com

*யாருக்குச் சொந்தமோ அவர்களைச் சேர்கிறது"* என்று உயிரற்ற பொருள்களுக்குக் கூட பெண்கள் உரிமையானவர்களில்லை என்கிறது. *"ஆண்களைத் தவறு செய்யத் தூண்டுவதே பெண்களின் இயல்புதான்; ஆகவே பெண்களுடன் இருக்கும் போது அறிவுடையோர் கவனக் குறைவாக இருக்க மாட்டார்கள்"* என்று *பெண்மையைப் பெருமைப்படுத்துகிறது! "30 அகவையுள்ள ஆண் 12 அகவையுள்ள பெண்ணையும், 24 அகவையுள்ள ஆண் 8 அகவையுள்ள பெண்ணையும் மணக்கலாம்"* என்கிறது மனுதர்மம்.

திருமணம் என்பது மதவழிப்பட்ட நிலையான ஒப்பந்தம் என்றால் தனிப்பட்டவர் மனச்சாட்சி என்பதன் பொருள் என்ன? சட்டத்தின் முன் இருவரும் சமம் என்பதன் பொருள் என்ன? திருமணமும், கணவன் 'பாதுகாப்பும்' தங்களுக்கான தீர்வாகப் பல பெண்கள் நினைக்கிறார்கள். காதலித்து மணப்பது என்பதற்குப் பதில் மணந்து காதலிப்பது என்னும் அறியாமையினால் வெளிப்படும் பழம் பிற்போக்காளரின் பாரம்பரியம் உடைத்தெறியப்படாத வரை பெண்களின் கண்ணீரைப் போக்க முடியாது! இப்பதத்தின் உள்ளர்த்தம் என்ன? *'கல்லானாலும் கணவன்- புல்லானாலும் புருசன்'* என்பதைச் சுற்றிவளைத்துச் சொல்லும் ஒரு சொல்லாகும். வாழ்க்கைத் துணைவி, மனைவி, பெண்டாட்டி ஆகிய சொற்கள் தரும் நடைமுறைப் பொருள்கள் மயங்கிய நிலையிலேயே உள்ளன.



பெண்களின் தாழ்வுணர்ச்சியும் அடக்கமும் மந்தத் தனமும் அடிபணிதலும் அச்சமும் எங்கிருந்து தோன்றுகின்றன? அவளின் வளர்ப்பில், ஆண் ஆதிக்க மரபில், சுற்றுச் சூழலின் இறுக்கத்தில்!

## கற்பும் ஒரு காரணம்!

'ஆண்-பெண் இருபாலரில் பெண்களுக்கு மட்டுமே கற்பு வலியுறுத்தப்படுகிறது. இதுவே பெண்ணை அடிமையாக்குவதற்குப் பெரிதும் காரணமாக அமைகிறது! இருவரும் சரிசமமான சுதந்தரத்துடன் வாழ வேண்டும் என்று அடிப்படையான லட்சியமும் கொள்கையும் மாற்றப்பட்டு இருபாலருக்கும் கற்பு பொது என்பதை வலியுறுத்த வேண்டும். கற்பு, காதல், கல்யாணம், கைம்மை, விபசாரம், சொத்துரிமை ஆகிய காரணங்களால் பெண்கள் அடிமைத்தனத்திற்கு உள்ளாகி உரிமைகளை இழக்கிறார்கள் என்கிறார் தந்தை பெரியார்.

நாயகன்-நாயகி, கணவன்-மனைவி என்னும் சொற்களைப் பயன்படுத்தி விட்டு *'கற்பு'* என்ற நிலைக்கு வரும் போது அதைப் பெண்களுக்கு மட்டுமே தொடர்புபடுத்தி, பதியாகிய எஜமானனையே கடவுளாகக் கொள்ள வேண்டும் என்ற கருத்து கொள்ளப்பட்டிருக்கிறது.

பெண்களுக்கென புறவாழ்க்கையோ, தன்னுரிமையுடன் தன் விருப்பத்துடன் கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையோ இச்சமூகத்திலில்லை. இந்நிலை சட்டத்தாலும் மதத்தாலும் மட்டும் ஏற்பட்டதல்ல. பெண்கள், தாங்கள் ஆண்மக்களின் சொத்துக்கள் என்றும், ஆண்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்றும் அவர்களது கோபத்திற்கு ஆளாகக் கூடாது என்றும் நினைத்துக் கொண்டு சுதந்தரத்தில் கவலையற்று இருக்கிறார்கள். கொடுமைக் குழியில் புதைந்த குலக் கொழுந்துகளான பெண்களுக்கு நீதி வழங்க முடியாமல் சுதந்தர இந்தியாவின் இன்றைய நீதிமன்றங்கள் வாடியுள்ளன!

இந்தியப் பெண் சமுதாயத்தில் நீதியின் பகல்கள் வேகமாகக் குறைந்து வருகையில் அநீதியின் இரவுகள் எண்ணிக்கையிலும் எல்லைப் பரப்பிலும் விரிந்து கொண்டுள்ளன. சில நேரங்களில் இச்சமூக அமைப்பில் சட்டங்களை விட மரபே கோலோச்சுகிறது. பெண்கள் மரபுக்குள் மிக ஆழமாகப் புதைக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால்தான் பல நேரங்களில் மனிதாபிமானத்திற்கும் நீதிக்கும் அப்பாற்பட்டது மதம் என்ற நிலை! இதை உறுதி செய்யும் நிகழ்ச்சிதான் 1987 செப்டம்பரில் இராஜஸ்தான் மாநிலம் தேவ்ராலா கிராமத்தில் 17 வயதே நிரம்பிய ரூப் கன்வர் திருமணமாகி எட்டே மாதங்களில் *'உடன்கட்டை ஏறுதல்'* என்னும் பெயரில் கொல்லப்பட்டாள்! பெண்களைப் பொறுத்த வரையில் இந்து தர்மமும், மனுநீதியும் நிகழ்காலத்திலும் சட்டமாக இருக்கிறது என்பதை இந்நிகழ்ச்சி உறுதியாக்குகிறது. திருமணமாகி கணவரை விவகாரத்து செய்த பெண், பெற்றோருடன் தங்கியிருந்தாலும் அப்பெண்ணைப் பெற்றோரின் குடும்ப உறுப்பினராகக் கருத முடியாது என நமது உச்ச நீதிமன்றம் கடந்த ஏப்ரலில் தீர்ப்பொன்றில் கூறியுள்ளதையும், மேற்கூறிய நிகழ்ச்சியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது பெண்மை இம்மண்ணில் பெற்ற புண்ணியம் என்ன என்று மனிதநேயம் கொண்ட மனிதர்களுக்கு ஏற்படுவது இயற்கையே!

சட்டங்கள் இயற்றுவதன் மூலம் கொடுமைகளைத் தடுத்து விட முடியும் எனக் கூறப்படுகிறது. ஆனால் பெண்கள் மீதான வன்முறைக்கு எதிரான ஒவ்வொரு போராட்டத்திற்கும் பிறகே ஒரு புதிய சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது என்பதைக் கடந்த கால வரலாறு கூறுகிறது! இதிலும் எண்ணற்ற ஓட்டைகள், பெண்களின் இப்போதைய நிலையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்கிற உண்மையான அக்கறை இல்லாமல் இச்சட்டங்கள் பெயருக்கே உலவுகின்றன! பெண்கள் இயக்கங்கள் கூட குறுகிய வரையறைக்குள்ளாகவே இருக்கின்றன. சமூகத்தில் பெண்களின் அடிப்படைகள் குறித்தோ, அந்தஸ்து குறித்தோ கேள்விகள் எழுப்புவதில்லை. இதனால் தீர்வுகள் ஆணாதிக்கக் கட்டமைப்பிற்குள்ளேயே நாடப்படுகின்றன.

*"கல்வியில்லாத பெண்கள் களர் நிலம். அந்நிலத்தில் புல் விளைந்திடலாம்; நல்ல புதல்வர்கள் விளைவதில்லை"* என்கிறார் பாவேந்தர். பண்டைத் தமிழகத்தில் பெண்கள் சிறந்த கல்வி பெற்றிருந்தார்கள். புலவர்களாக, அறிஞர்களாக, ஆட்சியாளருக்கு உதவும் அமைச்சர்களாக, தூதுவர்களாய்ச் சென்று போர்க்கொலைத் தொழில் ஒழியப் போராடியிருக்கிறார்கள். விளைநிலம் பயிரிட்டு விளைச்சலைப் பெருக்கியிருக்கிறார்கள்;



படிப்பகம்

www.padippakam.com

ஏர்க்களத்தில் மேழி பிடித்தும், போர்க்களத்தில் வாள் பிடித்து பகைவரை மாய்த்தும் இருக்கிறார்கள். தம் பிள்ளைகளைப் பேரறிஞர்களாகவும் காண விரும்பி, தன் மகன் சான்றோன் எனக் கேட்டு ஈன்ற பொழுதினும் பெரிதும் உவந்திருந்தனர்.

*"உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும் ஓது பற்பல நூல்வகை கற்கவும் இலகு சீருடை நாற்றிசை நாடுகள் யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே திலக வாணுதலார் நங்கள் பாரத தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம். விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்"* என்கிறார் பாரதி. ஆகவே பெண்களின் மீதான வன்முறை, ஆணாதிக்கம், பலாத்காரம் என்பது இயற்கையானதன்று; அது மனித வரலாற்றின் போக்கில் உருவானதாகும்.

இப்போக்கினை மாற்றும் முதன்மையான ஆயுதம் பெண் கல்வி ஒன்றே. பீகாரில் 20 கிராமங்களையும் கேரளாவில் 10 கிராமங்களையும் தேர்ந்தெடுத்து ஆய்வு செய்ததில், எங்கு பெண்கள் அறியாமையிலிருக்கிறார்களோ அங்கு அதிகமான கொலை, கொள்ளை, பாலியல் வன்முறைகள் நிகழ்ந்துள்ளன என்பது ஆய்வின் மூலம் தெரிகிறது. மக்கள்தொகைப் பெருக்கத்தைச் சுருக்கி, வறுமையை ஒழித்து வெற்றி கண்டுவிட்டால் இந்தியா வளர்ச்சியடைந்த நாடுகளை விட அதிவேகமாக முன்னேறி விடும் என்று சமூகவியலாளர் கருதுகின்றனர். அதற்கு ஒரே வழியாக இருப்பது பெண் கல்வி. இதைப் பொருளாதார நிபுணரான அமர்த்தியா சென் கூட ஏற்றுக் கொள்கிறார். ■

# ஓர் 'அழகி'ய திரையோவியம்!

உலகில் எந்த ஒரு மனிதரை எடுத்துக் கொண்டாலும் அவரது இளமைக் காலம் என்பது என்றும் மறையாத, அழியாத, ஒரு பசுமையான பகுதியாகத்தான் இருக்க முடியும். என்றும் நினைத்து அசை போட எத்தனையோ நிகழ்வுகள், அடுத்த தலைமுறையிடம் சொல்லிச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ள என்றோ ஒரு நாள் செய்த சின்னச் சின்னச் சாதனைகள். நெஞ்சில் வஞ்சனையின்றி வெள்ளையுள்ளத்தோடு செய்த வகை வகையான குறும்புகள். இரப்பர், பென்சில் திருட்டுகள். உலகே அழிந்தாலும் நாம்தான் இணைபிரியாத நண்பர்கள் எனக் கருதியிருந்த வின்சென்டும் முருகனும் இன்று இருக்கும் இடம் கூடத் தெரியாமல் போன விந்தை. குழந்தையுள்ளத்தோடு உடனே ஏற்படும் நட்பு, ஒரு நொடியில் உண்டாகும் பகைமை. வகுப்புத் தோழியர் மீது ஏற்படும் இனம்புரியாத ஈர்ப்பு. இளமையில் கண்ட அதே திரைப்படத்தை முதுமையில் காணும் போது அந்நிகழ்வோடு ஒட்டி மனத்தில் ஓடத் தொடங்கும் சுவையான காட்சி வரிசைகள். உண்மையில் எழுதி, சொல்லி மாளாத இளமைக்கால நினைவுகள் எண்ணிலடங்கா.



இந்த உணர்வுகள் எந்த அளவுக்கு மென்மையானவையோ, இந்த உணர்வுகளையே ஒரு படைப்பாய் வடிப்பது அந்த அளவுக்குக் கடினம். இளமைக்கால மறவா நினைவுகளைப் பதிவு செய்த ஆர்.கே. நாராயணின் *மால்குடி நாட்களை* (Malgudi Days) படித்துச் சுவைத்துள்ளோம். தன் இளமைக் காலத்தில், பத்து வயதுக்குள் ஏற்பட்ட அனுபவங்களை, உணர்வுகளைச் சுவை குன்றாமல் சொன்ன நூலாசிரியரின் படைப்பு ஆளுமையையும், அதற்கு வெற்றிகரமாகச் சின்னத்திரையில் வடிவம் கொடுத்த 'தூர்தர்ஷ'னின் படைப்பையும் என்றும் மறக்க முடியாது.

பள்ளிப் பருவ நினைவுகளை, அங்கு ஏற்படும் குறும்புத்தனமான நட்பைத் திரையில் படைத்த படம் என்றவுடன் நம் எல்லோர் கண் முன்னும் உடனே விரிவது இயக்குநர் பாலுமகேந்திராவின் *அழியாத கோலங்கள்*. அந்த மூன்று பள்ளிச் சிறுவர்களும் கூட்டாய்ச் செய்யும் குறும்புகளைச் சுவைத்த எவரும் மறந்திருக்க முடியாது. அவர்களுக்குத் தங்கள் வகுப்பாசிரியை மேல் ஏற்படும் ஈர்ப்புதான் படத்தின் மையக்கரு. இளமை நினைவுகளோடு படம் முடிகிறது.

ஆனால் 'அழகி' திரைப்படத்தில் கதாநாயகன் சண்முகத்துக்கு 'அழகி' தனலெட்சுமி மீது ஏற்படும் இளம்பருவ மோகம், அதுவே பின்பு கல்லூரிப் பருவத்தில் காதலாகி, முதுமைப் பருவத்தில் வேறு ஒருவரோடு மணமான பின்பும் தொடர்வதை அழகுறச் சமைத்து முழு வெற்றி பெற்றுள்ளார் இயக்குநர் தங்கர் பச்சான் (அவரது தமிழில் நெறியாள்கை செய்துள்ளார்). இளம்பருவ மோகத்தை மண்ணின் (தென் ஆற்காடு மாவட்டம்) மணங்குன்றாமல் அப்படியே வடித்திருக்கிறார். தமிழில் மண்ணின் பின்புலத்தோடு திரைக்கவிதை வடிப்பதில் தன் முதல் படத்திலேயே வெற்றி பெற்றுள்ளார்.

சண்முகம் பள்ளிக் காதலை மனத்திலேந்தி முதுமையிலும் நெஞ்சில் சுமந்து பழைய இனிமைகளைக் கிஞ்சிற்றும் மறக்க இயலாமல் கனவிலும் நனவிலும் தன் 'அழகி'யைச் சுற்றியே சுழல்கிறான், தொடர்ந்து தேடி அலைகிறான்.

கடல் மணலெங்கும் பாதச் சுவடுகள். சுவடுகளுக்குச் சொந்தமான 'அழகி'யைத் தேடி சுற்றிச் சுற்றி அலைகிறது ஒளிப்படக்கருவி - திரைக்கதையை செல்லுலாய்டுக் கவிதையாகத் தொடங்குகிறது படம்.

சண்முகத்தின் நினைவுகளைத் தொடக்கப் பள்ளிக்கும் உயர்நிலைப் பள்ளிக்குமாக, இரு முறை கொண்டு செல்கிறார். கதைமாந்தரின் குரலோடு பழைய நிகழ்வுகளைப் பதிவு செய்வது பழைய உத்தி என்றாலும், நாயகன் பழைய நினைவுகளுக்குத் திரும்பும் போதெல்லாம் நம்மையும் கூடவே பயணம் செய்ய வைத்து விடுகிறார். காட்சி மாற்றங்களில் அப்படி ஒரு கச்சிதம், விறுவிறுப்பு.

*[தொடர்ச்சி பக்கம் 26]*



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்த் தேசிய முன்னணி

## கொள்கை அறிக்கை

## *(வரைவு)*

1. உலகெங்கும் பல தேசிய இனங்கள் தத்தமக்குரிய வரலாற்றுத் தாயகங்களில் தனி உரிமை பெற்று வாழ்ந்து கொண்டிருக்க, தமிழர்களின் தாயகமாகிய தமிழ்த் தேசம் இந்திய அரசமைப்பில் ஒரு மாநிலமென்று குறுக்கிக் கொச்சைப்படுத்தப்பட்டுள்ளது.

2. தமிழ்த் தேசத்தின் எல்லைகளைத் தற்போக்காக மாற்றியமைக்கவோ வெட்டிக் குறைக்கவோ, ஏன், தமிழ்நாடு என்ற ஒன்றே இல்லாமற்செய்யவோ தில்லி அரசு அதிகாரங் கொண்டுள்ளது. இதனால்தான் தொன்று தொட்டு நம் வட ...யாக விளங்கி வந்த வேங்கடம் (திருப்பதி), மேற்கே தேவிகுளம்-பீர்மேடு, நெய்யாற்றங்கரை, நெடுமங்காடு உள்ளிட்ட வளமான பல எல்லைப் பகுதிகளை நாம் பறிகொடுத்து நிற்கிறோம். இதனால்தான் கச்சத்தீவை இழந்து நம் உரிமைகளையும், மீனவர்களின் உயிர்களையும் கூட நாளும் இழந்து கொண்டிருக்கிறோம்.

3. இந்தியக் குடிமக்கள் இந்தியாவெங்கும் சென்று தொழில் புரிய அரசமைப்பு வழங்கும் உரிமையைப் பயன்படுத்தி மார்வாரி-குசராத்தி சேட்டுகளும் பிற வேற்றின முதலாளிகளும் தமிழ்நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்தும் நிலை வளர்ந்து வருகிறது. நமது நிலமும் வாழ்வும் பறிபோய், தமிழகத்திலேயே தமிழர்கள் ஏதிலிகளாவதற்கு இது வழிகோலி வருகிறது.

4. தமிழகம் மொழிவழி மாநிலமாக அமைக்கப்பட்ட பிறகும் கூட அதன் எல்லைகள் மீதும் ஆட்சிப் பரப்பின் மீதும் தமிழ்த் தேசிய இனத்திற்கு இறையாண்மை இல்லை. எனவே வேற்றினத்தவர், குறிப்பாக அண்டைத் தேசிய இனத்தவர் நம் தேசத்தில் விருப்பம் போல் நுழைந்து குடியேறுவதற்கு எவ்விதக் கட்டுப்பாடும் இல்லாமற் போய் விட்டது. வேற்றினத்தவரின் மக்கள்தொகைப் படைபெடுப்பால் தமிழ்த் தேசத்தின் ஒருசில பகுதிகளில் தமிழர்களே சிறுபான்மையாக மாறும் ஆபத்து வளர்ந்துள்ளது. ஆனால் நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழகத்தைத் தங்கள் வாழ்விடமாகக் கொண்டு இருந்து வரும் பிறமொழியாரை மேற்சொன்னவர்களோடு ஒன்றாகக் கருதுவதற்கில்லை.

5. இந்திய அரசமைப்புச் சட்டம் இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழி என்றும் ஆங்கிலத்தை இணை ஆட்சி மொழி என்றும் திணிப்பதோடு நம் தேசிய மொழியாகிய தமிழை வட்டார மொழி என்று இழிவுபடுத்துகிறது. ஆட்சி, நீதி, கல்வி, வழிபாடு, இசை உள்ளிட்ட எல்லாத் துறைகளிலும் தமிழ் புறக்கணிக்கப்படுகிறது.

6. இந்தியத் தேசியத்தின் பெயரால் தாயக உரிமையும் மொழியுரிமையும் மறுக்கப்பட்டு நம் தமிழ்த் தேசிய அடையாளம் அழிக்கப்படுகிறது. தமிழன் என்று சொல்லிக் கொள்வதே பிரிவினைவாதமாகவும் தீவிரவாதமாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. பாரதத்தின் பழமைச் சிறப்பு என்ற பெயரால் பார்ப்பனிய இந்துத்துவ மேலாதிக்கமும் வடமொழியின் முதன்மையும் வலியுறுத்தப்பட்டு, தமிழின் தொன்மையும் தமிழினத்தின் தனித்தன்மையும் மறுக்கப்படுகின்றன.

7. வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை, ஐந்தாண்டுக்கு ஒரு முறை தேர்தல், சட்டப் பேரவை இன்னபிற சனநாயக அடையாளங்கள் இருந்த போதிலும், உண்மையில் தமிழ்த் தேசிய இனத்திற்கு அரசுரிமை இல்லை. தில்லி அரசின் நிர்வாக வசதிக்கான ஒரு கீழ்நிலையமைப்பாகவே தமிழக அரசு உள்ளது. ஆளுநர் பதவி, அனைத்திந்தியப் பணிகள் முதலானவற்றைப் பயன்படுத்தி அன்றாட நிர்வாகத்தில் தில்லி குறுக்கிடுவதும் ஆட்சிக் கலைப்பு விதியும் காட்டுவது இதைத்தான். தேசிய இனங்களின் அரசுரிமையை அடியோடு மறுதலிக்கும் இந்திய அரசமைப்புக்கு உட்பட்டு இந்திய நாடாளுமன்றத்துக்கு ஒப்பளவில் மிகச் சில உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு என்பது தமிழ்த் தேசத்தின் அடிமை நிலையை மறைக்கத்தானே தவிர ஒழிக்கப் பயன்படுவதன்று.

8. தமிழகத்தின் இயற்கை வளங்கள் தமிழ்த் தேசிய இனத்துக்குச் சொந்தமாயில்லை. அவை முழுக்க தில்லி அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. தொழில்துறை தொடர்பான அடிப்படை அதிகாரங்கள் அனைத்தும் தில்லி அரசுக்கே உள்ளன.

9. இந்திய அரசை ஆட்டிப் படைப்பவர்களாக இந்தியப் பெருமுதலாளிகள், குறிப்பாக மார்வாரி-குசராத்தி சேட்டுகள் உள்ளனர். இவர்கள் உலகளாவிய பன்னாட்டு முதலாளிகளுடன் சேர்ந்து கூட்டுச் சுரண்டலில் ஈடுபட்டிருக்கிறார்கள். தில்லியில் மட்டும் அனுமதி பெற்று இவர்கள் இந்தியாவில் தமிழகம் உள்ளிட்ட அனைத்துத் தேசங்களையும் சூறையாடுவதற்கே இந்திய அரசமைப்பு வழிசெய்கிறது. 'இந்தியத் தேசியம்', 'இந்திய ஒற்றுமை', 'தேசிய ஒருமைப்பாடு' போன்ற கூப்பாடுகளும் இதற்கே பயன்பட்டுள்ளன, தொடர்ந்து பயன்பட்டும் வருகின்றன. உலகமயமாக்கம் என்ற பெயரிலான பன்னாட்டுக் குழுமங்களின் கொள்ளைக்கு 'வல்லமை வாய்ந்த இந்தியா', 'போட்டியிடும் இந்தியா' போன்ற கூச்சல்கள் துணை செய்து வருகின்றன. தனியார்மயம், தாராளமயம், உலகமயம், தானியங்கிமயம், கணிப்பொறிமயம் எல்லாம் சேர்ந்து சமூகத்தில் ஏழ்மையையும் ஏற்றத்தாழ்வையும் மென்மேலும் மோசமாக்கி வருவதோடு வேலையின்மையையும் பெருகச் செய்துள்ளன.

10. தமிழகத்தில் தமிழர்கள் நடத்தி வந்த தொழில் நிறுவனங்களையும் மொத்த வணிகத்தையும் மார்வாரிகள்-குசராத்தி சேட்டுகள் பெருமளவுக்குக் கைப்பற்றி விட்டார்கள். எஞ்சியதையும் விழுங்க முயன்று வருகிறார்கள்.

11. இந்திய அரசமைப்பில் வேளாண்மைத் துறை பெயரளவுக்கு மாநில அதிகாரப் பட்டியலில் இருந்த போதிலும் பல்வேறு வழிகளிலும் தில்லி அரசே இத்துறையிலும் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. நில உறவுகள், இடுபொருட்கள் மற்றும் விளைபொருட்களின் விலை, கடன் வசதி, சந்தைப்படுத்தல் முதலான எல்லாவற்றிலும் இறுதி அதிகாரம் தில்லிக்கே உள்ளது.

12. பசுமைப் புரட்சியினால் உணவு உற்பத்தி அதிகரித்துள்ள போதிலும், பன்னாட்டு, இந்தியப் பெருமுதலாளிக் குழுமங்களின் வேதி உரங்களையும் உயிர்க்கொல்லி மருந்துகளையும் நவீன வேளாண் கருவிகளையும் சார்ந்ததாகத் தமிழக வேளாண்மை மாற்றப்பட்டு விட்டது. இதனால் நிலவளம் கொள்ளையிடப்பட்டதும் உழவர்கள் கடனாளிகள் ஆக்கப்பட்டதும்தான் கண்ட பலன். உலகமயம் என்பதன்



படிப்பகம்

www.padippakam.com

பெயரால் விதை தொடங்கி ஒவ்வொன்றுக்கும் தமிழ்நாட்டு உழவர்கள் பன்னாட்டுக் குழுமங்களைச் சார்ந்து கிடக்கும் அவலம் உருவாகியுள்ளது. தாராள இறக்குமதிக் கொள்கையானது அவர்களை அவர்களின் சொந்தச் சந்தையிலிருந்தும் விரட்டியடித்து விட்டது. உழவு சார்ந்த துணைத் தொழில்களான கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு போன்றவற்றிலும் இதே நிலைதான்.

13. தமிழகத்துக்குக் காவிரி ஆற்று நீர் உரிமையைக் கருநாடகமும் பெரியாற்று நீர் உரிமையைக் கேரளமும் தொடர்ந்து மறுத்து வருகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலையில் தமிழக எல்லைக்குள் உற்பத்தியாகி கேரளம் வழியாகப் பாய்ந்து வீணாய் அரபிக் கடலில் கலக்கும் நீரைத் திருப்பி விட்டுத் தமிழகத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதும் கூட கேரளத்தின் எதிர்ப்பினால் ஏட்டளவுத் திட்டமாகவே இருந்து வருகிறது. இந்தச் சிக்கல்களுக்குத் தீர்வு கண்டு தமிழகத்தின் ஆற்று நீர் உரிமையை மீட்டுக் கொடுக்க இந்தியத் தேசியம் இம்மியும் பயன்படவில்லை.

14. மாநில விற்பனை வரியைத் தவிர மற்ற பெரும்பாலான வருவாய் வழிகள் தில்லி அரசிடமே உள்ளன. தமிழகத்திலிருந்து ஏற்றுமதியாகும் கடல் பண்டம், தோல், செயற்கை வைரம், ஆயத்த ஆடைகள், பின்னலாடைகள், கனிமப் பொருட்கள், கறுப்புக் கல் முதலானவை ஈட்டித் தரும் அயற்செலாவணி அனைத்தையும் தில்லியே அள்ளிக் கொள்கிறது. அதே தில்லியிடம் அற்ப சொற்ப உதவிகளுக்காகவும் கூட தமிழகம் கையேந்தி நிற்கும் அவல நிலை உள்ளது.

15. பாரதப் பண்பாடு, இந்தியப் பெருமிதம் என்ற பெயரால் பார்ப்பனியப் பண்பாடு திணிக்கப்படுகிறது. இந்தியத் தேசியத்தின் தத்துவ, பண்பாட்டு அடிப்படையே பார்ப்பனியம்தான். அரசு விழாக்கள் ஆயினும் சரி, அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள செய்தியூடகங்கள் ஆயினும் சரி, பார்ப்பனியப் பண்பாட்டுக் குறியீடுகளையே இந்தியப் பண்பாடாகக் காட்டிப் பரப்பி வருகின்றன.

16. மறுபுறம், உலகமய ஒளிவெள்ளத்தில் மேற்கத்தியப் பண்பாட்டு மேலாதிக்கமும் வளர்ந்து வருகிறது. இதன் ஒரு கூறாகவே நுகர்வியத்தின் வளர்ச்சியைப் பார்க்க வேண்டியுள்ளது. பார்ப்பனியப் பண்பாடு, மேற்கத்தியப் பண்பாடு இரண்டுமே தனிமனித ஆதாய வெறியை அடிப்படையாகக் கொண்டவை, சமூக நலனுக்கும் மாந்த நேயத்துக்கும் புறம்பானவை.

17. பாரதப் பண்பாடு, நவநாகரிகம் என்ற பெயர்களால் தமிழர்களின் மரபுவழிப்பட்ட கலை, அறிவியல், மருத்துவம் உள்ளிட்ட யாவும் புறக்கணிக்கப்படுகின்றன. அவை கடந்த காலத்தின் மிச்ச சொச்சங்களாகவோ பழம் பெருமையின் அடையாளங்களாகவோ மட்டுமே காட்டப்படுகின்றன.

18. திரைப்படத் தணிக்கை, ஏடுகளின் பதிவு ஆகியவற்றுக்கான அதிகாரமும் தில்லியிடமே உள்ளது.

19. இந்தியத் தேசியம் என்பது தமிழினத்தின் மீதான தேசிய ஒடுக்குமுறையாக அமைந்திருப்பதோடு தமிழ்ச் சமூகத்தின் ஒற்றுமையைக் குலைத்து வரும் சாதிய ஒடுக்குமுறையையும் நிலைநிறுத்தி வருகிறது. வர்க்கச் சுரண்டலை அடித்தளமாகவும் இந்து மதப் பண்பாட்டை அரணாகவும் கொண்ட வருண-சாதி அமைப்பின் ஊற்றுக் கண்ணாகிய பார்ப்பனத்துவமே இந்தியத் தேசியத்தின் தத்துவ அடிப்படையாகவும் உள்ளது. தமிழ்த் தேசத்தில் சமூக நீதி நிலைநாட்டப்படுவதற்கு இந்தியத் தேசியம் தடையாக இருந்து வருகிறது.

20. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான தீண்டாமையும் இழிவும் வன்கொடுமைத் தாக்குதல்களும் வருண-சாதி அமைப்பின் கொடிய வெளிப்பாடுகளாக உள்ளன. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் இன்னமும் கல்வி-வேலைவாய்ப்பில் தங்களுக்குரிய பங்கை அடைந்தபாடில்லை. தனியார்மயத்தின் வளர்ச்சி இம்மக்களுக்குக் கிடைக்கக் கூடிய இட ஒதுக்கீட்டையும் இல்லாமற் செய்து வருகிறது.

21. இந்தியப் பாரம்பரியம், மத ஒழுக்கம் என்ற பெயர்களால் பெண்கள் மீதான ஆணாதிக்க ஒடுக்குமுறை நியாயப்படுத்தப்படுகிறது, பெண்ணுரிமைக் குரல் நெரிக்கப்படுகிறது. (தமிழ் மரபின் பெயரால் பெண்ணடிமைத்தனம் வலியுறுத்தப்பட்டால் அதையும் ஏற்பதற்கில்லை.) கல்வி, வேலைவாய்ப்பு, அரசதிகாரம் ஆகியவற்றில் பெண்களுக்குரிய பங்கு இன்றளவும் நிறைவு பெறவில்லை.

22. இந்திய அரசு தன்னை மதச்சார்பற்றது என்று சொல்லிக் கொண்டாலும் இந்துத்துவச் சார்பு கொண்டே இயங்கி வருகிறது. இந்துத் தன்மையே இந்தியத் தன்மையாக காட்டப்படுகிறது. இசுலாமியர், கிறித்தவர் உள்ளிட்ட மற்றச் சமயத்தவரின் மத ஒழுக்கமும் பழக்கவழக்கங்களும் இந்தியத் தன்மைக்கு அப்பாற்பட்டவையாகச் சித்திரிக்கப்படுகின்றன. கல்வியிலும் செய்தி ஊடகங்களிலும் மட்டுமல்லாமல் அரசு நிகழ்ச்சிகளிலும் கூட இந்தச் சாயலே மேலோங்கி நிற்கிறது. இந்து மதவெறியும் அதன் எதிர்வினையாக எழுந்துள்ள ஏனைய மதவெறிப் போக்குகளும் தமிழர் ஒற்றுமையைக் குலைத்து வருகின்றன.

23. உள்நாட்டுக் கொள்கையில் மட்டுமல்லாமல் அயலுறவுக் கொள்கையிலும் இந்திய அரசின் அணுகுமுறை தமிழர்களுக்கு எதிரானதாகவே இருந்து வருகிறது. இலங்கையின் மலையகத் தமிழர்களில் ஒரு பகுதியினரின் குடியுரிமையைப் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கியதிலும், எஞ்சியவர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக நடத்துவதிலும் சிங்களப் பேரினவாத அரசுக்கு இந்திய அரசு உடந்தையாகவே இருந்து வந்துள்ளது. தமிழீழ மக்களின் வீரஞ்செறிந்த விடுதலைப் போராட்டத்தையும் இந்திய அரசு தன் புவிசார் அரசியல் நலன் கருதியே எதிர்த்து வருகிறது.

24. இவ்வாறு அரசியல், பொருளியல், பண்பாடு என்று எல்லாத் தளங்களிலும் தமிழ்த் தேசம் தன் இறையாண்மையை இழந்து இந்தியச் சிறையில் தளையுண்டுக் கிடக்கிறது. வர்க்கச் சுரண்டல், வருண-சாதி ஆதிக்கம், ஆணாதிக்கம் இப்படி எல்லா ஒடுக்குமுறைகளுக்கும் நிலைக்களனாக இந்தியத் தேசியம் விளங்குகிறது.

25. இந்திய விடுதலைக்கான போராட்டத்தில் தமிழர்கள் முக்கியப் பங்கு வகித்து மகத்தான தியாகங்கள் செய்துள்ள போதிலும் அவர்களுக்கு எந்த ஒடுக்குமுறையிலிருந்தும் அது விடுதலை பெற்றுத் தரவில்லை.

26. இந்தியத் தேசியத்தின் அடிப்படைச் சக்திகள் இவையே: (1) உலகளாவிய பன்னாட்டு மூலதனத்துவத்துடன் கூட்டாக இருக்கும் இந்தியப் பெருமுதலாளிகள், குறிப்பாக மார்வாரி-குசராத்தி சேட்டுகள்; (2) பார்ப்பனர்களும் பார்ப்பனுத்துவச் சக்திகளும்; (3) இந்தி ஆதிக்கச் சக்திகள். இந்தச் சக்திகளின் கையில் உள்ள இந்திய அரசில் பெருநிலக்கிழார்கள் செல்வாக்குச் செலுத்துகிறார்கள்.

27. ஒடுக்குமுறையின் அனைத்துக் கூறுகளுக்கும் இந்தியத் தேசியமே நிலைக்களனாக இருப்பதால் தமிழ்நாட்டைப் பொறுத்த வரை



படிப்பகம்

www.padippakam.com

விடுதலையின் அனைத்துக் கூறுகளுக்கும் தமிழ்த் தேசியமே வழியாக இருக்க முடியும். எனவே எவ்வகையிலாயினும் அனைத்திந்திய நோக்கில் அடிப்படை மாற்றம் காண முயல்வது கானல் நீர்த் தேடலே தவிர வேறன்று. தமிழகத்தில் வர்க்கம், வருண-சாதி, பால், தேசிய இனம் ஆகிய ஒவ்வொரு வகை ஒடுக்குமுறையிலிருந்தும் விடுபடப் போராடுகிற அனைத்துச் சக்திகளும் தமிழ்த் தேசியம் என்ற மையப்புள்ளியில் ஒன்றிணைந்து தமிழ்த் தேசியப் புரட்சியை வெற்றி பெறச் செய்வது வரலாற்றுத் தேவையாகும்.

28. எல்லாத் தளங்களிலும் தமிழ்த் தேசம் தன் இறையாண்மையை மீட்டுத் தமிழ்த் தேச குடியரசு நிறுவியாக வேண்டும். இதற்காகப் போராடுவதே தமிழர்கள் ஆற்ற வேண்டிய உடனடிக் கடமை. மற்றத் தேசிய இனங்களுடன் இணைந்திருப்பது உள்ளிட்ட அனைத்துச் சிக்கல்களையும் தமிழ்த் தேசக் குடியரசு சுயநிர்ணய உரிமை (தன்னுரிமை) அடிப்படையில் முடிவு செய்யும்.

29. தமிழ்த் தேசியக் களத்தில் பல்வகைப்பட்ட சக்திகள் நெடுங்காலமாய்ப் போராடி வருகின்றன. இன்றும் கூட தமிழ்த் தேசியத்தை முன்வைத்து பல்வேறு அமைப்பினரும் தனி மனிதர்களும் போராடி வருகின்றனர். இவர்கள் எல்லாம் தமிழ்த் தேசக் குடியரசு காணும் குறிக்கோளுக்காக ஓரணியாய் ஒருங்கிணைந்து போராடும் தேவை எழுந்துள்ளது. இந்தத் தேவையை நிறைவு செய்யும் முயற்சியாகவே தமிழ்த் தேசிய முன்னணி அமைக்கப்படுகிறது.

30. **தமிழ்த் தேசக் குடியரசு நிறைவேற்ற வேண்டிய கடமைகளாகப் பின்வருவனவற்றைத் தமிழ்த் தேசிய முன்னணி முன்மொழிகிறது:-**

அ) அனைத்துத் துறைகளிலும் அனைத்து நிலைகளிலும் தமிழே ஆளும்படிச் செய்ய வேண்டும்.

ஆ) சமூகப் பொருளாதா ஏற்றத்தாழ்வை ஒழிக்கும் நோக்கில் பெருமுதலாளிகளின் ஆதிக்கத்தை ஒழித்து, அனைத்து வகைச் சுரண்டலையும் கட்டுப்படுத்த வேண்டும்.

இ) தீண்டாமை ஒழிப்பு, வருண-சாதி ஆதிக்க ஒழிப்பு, தனியார் துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் அனைத்து நிலைகளிலும் இடஒதுக்கீடு உட்பட சமூகநீதித் திட்டங்கள் வகுத்துத் திறம்படச் செயலாக்க வேண்டும்.

ஈ) நில உறவுகளில் முற்போக்கான மாற்றங்கள் செய்ய வேண்டும்.

உ) அனைவருக்கும் கல்வி, வேலை, ஊதியம், உணவு, உடை, உறைவிடம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை நிறைவேற்றுவதற்கான கல்விக் கொள்கை, தொழிற் கொள்கை, பொருளியல் கொள்கை வகுத்துச் செயலாக்க வேண்டும்.

ஊ) கல்வி, வேலைவாய்ப்பு, அதிகாரம் முதலான அனைத்துத் துறைகளிலும் பெண்கள் முழு உரிமை பெற்று வளரத் திட்டந் தீட்டிச் செயலாக்க வேண்டும்.

எ) பார்ப்பனிய, மேற்கத்தியப் பண்பாட்டுக்கு மாற்றாக வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் தமிழ்த் தேசிய இனமானப் பண்பாட்டை வளர்க்க வேண்டும்.

ஏ) சட்டமியற்றல், ஆட்சி செய்தல், நீதி வழங்குதல் ஆகியவற்றுக்கான அமைப்புகள் அனைத்தையும் சனநாயகப்படுத்தி மக்களுக்கு நெருக்கமானவையாக்க வேண்டும். வெள்ளையராட்சிக் காலத்திய ஆட்சி முறையை அடியோடு மாற்றியமைக்க வேண்டும்.

ஐ) மத, மொழிச் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும்.

ஒ) தமிழகத்தின் இயற்கை வளத்தையும் சுற்றுச் சூழலையும் கொள்ளையிடுவதிலிருந்தும் மாசுபடுத்துவதிலிருந்தும் பாதுகாக்க வேண்டும்.

ஓ) தமிழீழ விடுதலைக்கு ஆதரவாகவும் உலகத் தமிழர் நலன் காக்கவும் அனைத்து முயற்சிகளும் செய்ய வேண்டும்.

ஔ) உலகெங்கும் தேசிய விடுதலைக்காகவும் சனநாயத்துக்காகவும் சமத்துவத்துக்காகவும் நடைபெறும் இயக்கங்களுக்கு இயன்ற வகையிலெல்லாம் துணைசெய்ய வேண்டும்.

31. தமிழ்த் தேசியப் புரட்சியை வெற்றி பெறச் செய்து தமிழ்த் தேசக் குடியரசு அமைக்கும் குறிக்கோளை அடைவதற்குத் தேர்தல் பாதை உதவாது என்று தமிழ்த் தேசிய முன்னணி உறுதியாக நம்புகிறது. தேர்தலில் போட்டியிடுவதோ வாக்களிப்பதோ இக்குறிக்கோளை அடைவதற்கான போராட்டத்துக்குக் கிஞ்சிற்றும் பயன்படப் போவதில்லை என்பதோடு, போராடும் சக்திகளை மழுங்கடிக்கவும் சிதறடிக்கவுமே பயன்படும் என்பதில் தமிழ்த் தேசிய முன்னணி தெளிவாய் இருக்கிறது. போர்க்குணமிக்க தமிழர் ஒற்றுமையின் அடிப்படையிலான மக்கள் திரள் எழுச்சியைத் தமிழ்த் தேசிய முன்னணி தன் வழிமுறையாகக் கொள்கிறது. இதற்கு மாறான தனி மனித சாகசச் செயல்கள், எவ்வளவுதான் நல்ல நோக்கமுடையவை என்றாலும், நம் குறிக்கோளை அடையப் பயன்பட மாட்டா.

32. பதவிச் சுகம் தேடும் பகட்டு அரசியலைப் புறந்தள்ளி இன்னல்களுக்கு இன்முகம் காட்டித் தியாகத்துக்கு அஞ்சாத கொள்கை அரசியலில் நம்பிக்கை வைத்துள்ள தமிழ்த் தேசிய அமைப்புகளையும், அனைத்து வகை ஒடுக்குமுறைக்கும் எதிரான பிற அமைப்புகளையும், இதே தன்மையிலான தனிமனிதர்களையும் தமிழ்த் தேசிய முன்னணி அறைகூவி அழைக்கிறது: ஒன்றுபடுவோம்! போராடுவோம்! தமிழ்த் தேசக் குடியரசு அமைப்பதில் வெற்றி பெறுவோம்! ▣

## வாழ்க மணமக்கள்!

▣ சென்ற பிப்ரவரி மூன்றாம் நாள் சென்னையில் நலங்கிள்ளி (எ) கணேச் ராம் - ம. இராஜசெல்வி ஆகியோரின் வாழ்க்கைத் துணைநல ஒப்பந்த விழா தமிழ் தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் தோழர் தியாகு தலைமையில் சாதி மறுப்புத் திருமணம் இயக்கத் தோழர்களும் நண்பர்களும் உறவினர்களும் சூழ சிறப்பாக நடைபெற்றது. மணமக்களை மார்க்சிய-பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் அமைப்புச் செயலாளர் தோழர் வே. ஆனைமுத்துவும் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் இராசேந்திர சோழனும் வாழ்த்திப் பேசினர். மணமக்கள் சார்பில் தமிழ்த் தேசம் ஏட்டிற்கு ரூ.500/- நன்கொடையாக வழங்கப்பட்டது.

▣ சென்ற ஆகஸ்டு எட்டாம் நாள் தோழர் இரா. பாலாஜி - சே. தேவி வாழ்க்கைத் துணைநல ஒப்பந்த விழா தமிழ் தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் தோழர் தியாகு தலைமையில் சித்தூரில் (ஆந்திர மாநிலம்) நடைபெற்றது. தோழர் சோழநாடன் முன்னிலை வகித்தார். மணமக்கள் சார்பில் தமிழ்த் தேசம் ஏட்டிற்கு ரூ.500/- நன்கொடையாக வழங்கப்பட்டது.

▣ சென்ற நவம்பர் பதினெட்டாம் நாள் திருவண்ணாமலையில் தோழர் கோ. காமராஜ் - இரா. கமலி வாழ்க்கைத் துணைநல ஒப்பந்த விழா தமிழ் தமிழர் இயக்கப் பொதுச் செயலாளர் தோழர் தியாகு தலைமையில் நடைபெற்றது. ஏட்டிற்கு மணமக்கள் சார்பாக ரூ.1000/- நன்கொடையாக வழங்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

கண்ணகி:
# தமிழ் மரபின் அடையாளச் சின்னம்
## - பெ. மணியரசன் -

விபத்து நடக்கும் போது இழப்புகள் ஏற்பட்டாலும் விழிப்புணர்ச்சியும் அதனால் உண்டாகும். கண்ணகி சிலை அகற்றப்பட்ட நிகழ்வு கருத்துத் தெளிவுக்கான விவாதத்தையும் எழுப்பியிருக்கிறது.

கண்ணகி சிலை அகற்றப்பட்டது குறித்து முக்கியமாக மூன்று வகைக் கருத்துகள் பேசப்படுகின்றன. தமிழர்களின் பண்பாட்டுச் சின்னமான கண்ணகி சிலையை அகற்றியது தவறு என்பது முதலாவது கருத்து. பெண்ணடிமைச் சின்னமான கண்ணகி சிலையை அப்புறப்படுத்தியது தவறு இல்லை என்பது இரண்டாவது கருத்து. போக்குவரத்திற்கு இடையூறாக இருந்ததால் அச்சிலையை அகற்றியிருக்கிறோம், வேறோர் இடத்தில் அதை வைத்து விடுவோம் என்று தமிழக அரசு கூறுவது மூன்றாவது கருத்து.

சென்னை மெரினா கடற்கரைச் சாலையில் 1968 சனவரி 2ஆம் நாளில் இருந்து கையிற் சிலம்புடனும் கண்களில் கோபக் கனலுடனும் நின்றிருந்த கண்ணகி சிலை போக்குவரத்திற்கு இடையூறாக இருந்தது என்று தமிழக அரசு இப்போது கூறுவது பொருந்தாத **காரணம்.** 1968ஆம் ஆண்டு சென்னையில் நடந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி வைக்கப்பட்ட கண்ணகி சிலை உள்ளிட்ட 10 சிலைகளும் சாலைக்கு வெளியே போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல்தான் வைக்கப்பட்டன.

கோபத் தீ கொப்பளிக்க தலைவிரி கோலமாக ஆவேசக் காட்சி தரும் கண்ணசி சிலை, ஆட்சியாளர்களுக்குத் தீது விளைவிக்கக் கூடியது என சோதிடர்கள் இப்பொழுது நாள் தோறும் கூறி வருவதைக் கவனித்தால், அக்காரணம் பற்றியே அச்சிலை அரசால் அகற்றப்பட்டிருக்கலாம் என்று அய்யுற இடமுண்டு.

போக்குவரத்திற்கு இடையூறு என்று "பகுத்தறிவுப் போர்வை" போர்த்தி விட்டாலும், வாஸ்து சாத்திரம் என்று "சோதிடப் போர்வை" போர்த்தி விட்டாலும் கண்ணகி சிலை அகற்றப்பட்ட செயல், வரலாறு பற்றிய அறிவியல் பார்வைக்கும், பண்பாட்டு மரபு குறித்த சமூகவியல் பார்வைக்கும் புறம்பான நடவடிக்கை ஆகும்.

தற்போது, தேர்தல் வழிப்பட்ட அரசியலானது, பெரும் லாபம் தரும் தொழிலாக மாற்றப்பட்டு உள்ளது. பெரு வணிகர்கள் தங்கள் தொழிலில் இலாபம் கிடைப்பது குறித்து சோதிடம் பார்ப்பது போலவே, அரசியல் கட்சித் தலைவர்களும் சோதிடம் பார்க்கிறார்கள். தங்களின் எதிர்காலம் குறித்து சோதிடம் பார்ப்பது, யாகம் நடத்துவது என்று அவர்களில் பலர் இறங்கியுள்ளார்கள். இவர்கள் இச்செயல்களைப் பெரிதும் இரகசியமாகவே செய்கிறார்கள். இந்தப் பின்புலத்தில்தான் கண்ணகி சிலை அகற்றப்பட்டதையும் பார்க்க நேர்கிறது.

கண்ணகி சிலை ஆட்சியாளர்களுக்கு ஆபத்தை உண்டாக்கும் என்பதற்கு ஆதாரம் ஏதும் கிடையாது. அச்சிலை வைக்கப்பட்டு பிறகு எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, கலைஞர் கருணாநிதி, ஆகியோர் தனித்தனியே முழு ஐந்தாண்டுக் காலம் ஆட்சி நடத்தியுள்ளனர்.

சோதிடர் சொல்வதையெல்லாம் வைத்துக் கொண்டு ஒரு நாட்டின், ஓர் இனத்தின் வரலாற்றுச் சின்னங்களை அப்புறப்படுத்துவதை ஏற்றுக் கொண்டால் ஜனநாயகத்தின் பெயரால் ஜனநாயகத்தைப் பிணைக் கைதி ஆக்குவது என்று பொருள்; முடியில்லாத முடியாட்சி என்று பொருள்.

கண்ணகி பெண்ணடிமைத்தனத்தின் சின்னம், அப்பாவியான மதுரை மக்களை எரித்த கொடுமைக்காரி, அதிலும் பிராமணர்களை விட்டு விட்டு மற்றவர்களைக் கொல்லுமாறு கூறி தீயை ஏவியவள். அப்படிப்பட்ட கண்ணகி சிலையை அகற்றினால் என்ன, அகற்றியதுதானே புத்திசாலித்தனமான காரியம் என்று ஒரு வாதம் வைக்கப்படுகிறது.

கோவலன் விலைமகள் வீட்டில் போய் தங்கி விட்டதைத் தட்டிக் கேட்காமலும் அவனை விவகாரத்து செய்யாமலும் இருந்த கண்ணகி பெண்ணடிமைத்தனத்தின் சின்னம் என்கிறார்கள். இது பெண்ணடிமைத்தனம்தான்! ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிலவிய ஆணாதிக்கச் சமூகத்தில் வாழ்ந்த பெண் கண்ணகி என்பதைப் பார்க்க வேண்டும். இன்று நாம் பெண் விடுதலைக்காக வைக்கும் அத்தனை கொள்கைகளையும் ஏற்றவளாக கண்ணகி இருந்திருக்க முடியாது.

பெண்ணடிமைத்தனத்தை கண்ணகி விரும்பி ஏற்றுக்கொண்டாள் என்று பொருள் கொள்ள முடியாது. ஆணாதிக்கச் சூழல் அவளை அவ்வாறு செயல்பட வைத்தது. சாதிய ஒடுக்குமுறைக்கு உள்ளான ஒரு தலித் அதை எதிர்த்துப் போராடாதக் காரணத்தினாலேயே அவர் தலித் அடிமைத்தனத்தை காப்பாற்றியவர் என்று கொள்ள முடியாது. ஆதிக்கம் செலுத்தியவருக்குச் சமமாக அதற்கு உள்ளானவரைக் கருதக் கூடாது.

கண்ணகி காவியத் தலைவியாக நிலைத்து விட்ட காரணம் அவளது கட்டுப்பெட்டித்தனத்தினாலோ கற்பு ஒன்றினால் மட்டுமோ அல்ல. கட்டுப்பெட்டியான ஒரு குடும்பப் பெண், தன் கணவனுக்கு நேர்ந்த



படிப்பகம்

www.padippakam.com

அநீதியைத் துடைத்து நீதியை நிலைநாட்ட போர்க்கோலம் பூண்டு அரசவையில் வாதாடி, பாண்டிய வேந்தனை அவனது அரண்மனையிலேயே தோற்கடித்த அறநெறி சார்ந்த வீரத்தின் காரணமாகவே அவள் மக்களின் கதாநாயகியாக நிலைத்து விட்டாள். பெண்ணுரிமை கோருவோர் கண்ணகியின் இந்தப் படிமத்தைத்தான் முன்னிறுத்த வேண்டும். கடற்கரையில் நின்ற சிலையும் இந்த வடிவத்தில்தான் இருந்தது.

மதுரையை எரித்த நிகழ்வு முழு உண்மையா, காப்பியக் கைவண்ணமா என்ற தருக்கம் ஒரு பக்கம் இருக்க, அது குறித்து இளங்கோவடிகள் என்ன கூறுகிறார் என்று பார்க்கலாம்.

*"பார்ப்பார் அறவோர் பசு பத்தினிப் பெண்டிர்*
*மூத்தோர் குழவி எனுமிவரைக் கைவிட்டுத்*
*தீத்திறத்தோர் பக்கமே சேர்கென்று காய்த்திய*
*பொற்றொடி ஏவப் புகையழல் மண்டிற்றே*
*நற்றேரான் கூடல் நகர்"*

பிராமணர்களை மட்டும் விட்டு விட்டு மற்றவர்களை எரிக்கும்படி கண்ணகி ஏவினாள் என்பது முழு உண்மையை உரைக்கும் கூற்று அல்ல. பிராமணர், அறவோர், பசுக்கள், பத்தினிப் பெண்கள், வயது முதிர்ந்தோர், குழந்தைகள் என்ற இவர்களை விட்டு விட்டு தீச்செயல் புரிந்தோர் பகுதிகளை மட்டும் எரிக்கும்படி தீயை ஏவினாள் என்பதே இளங்கோவடிகள் கூற்று. எது எப்படி இருப்பினும் இவ்வாறான செயல்களை நாம் ஆதரிக்க வேண்டியதில்லை. தொன்மை நாகரிகத்துக்குச் சொந்தமான ஓர் இனம், தனது மொழியில் உள்ள பழம் பெரும் இலக்கியங்களை, அவ்விலக்கியக் கதாபாத்திரங்களை எவ்வாறு பார்ப்பது என்பதற்குச் சமூக அறிவியல் வழிகாட்டுகிறது.

"*பழைய இலக்கியங்களில், பழம்பெரும் பண்பாடுகளில் முற்போக்கு அம்சங்களும் இருக்கின்றன. பிற்போக்கு அம்சங்களும் இருக்கின்றன. முற்போக்கு அம்சங்களை ஏற்று அவற்றை மேலும் செழுமைப்படுத்த வேண்டும். பிற்போக்கு அம்சங்களைக் கைவிட்டு விட வேண்டும்*" என்கிறார் கார்ல் மார்க்ஸ்.

"*தற்கால மக்களுக்கு உணர்ச்சி ஊட்ட பழைய கதை மாந்தர்களின் வீரச் செயல்களை எடுத்துக் கூறலாம். ஆனால் நாம் எதுவும் செய்யாமல் பழைய கதாபாத்திரங்களின் முதுகுக்குப் பின்னால் ஒளிந்து கொள்ளக் கூடாது*" என்றும் மார்க்ஸ் கூறுகிறார்.

சிலப்பதிகாரத்தை எழுதுவதற்கான முதல் நோக்கமாக இளங்கோவடிகள் கூறுவது "*அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்*" என்பதாகும். அரசியலில் குற்றமிழைத்தவர்களை அறம் தண்டிக்க வேண்டும் என்ற இந்தக் குரல் இன்றைக்கும் தேவையான குரல்தானே! குற்றமிழைத்த ஆட்சியாளரை அன்று கண்ணகி தண்டித்தாள். இன்று மக்கள் தண்டிக்க வேண்டும்.

சிலப்பதிகாரத்தின் நாயகி என்ற முறையில் கண்ணகிக்கு உரிய முக்கியத்துவம் தர வேண்டியுள்ளது. சேர, சோழ, பாண்டிய நாடுகளை ஒன்றிணைத்து ஒரு தமிழ்த் தேசியக் காப்பியமாக சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் யாத்தார். 1969இல் நம் தாய் மண்ணுக்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டினார் அண்ணா. ஆனால் இளங்கோவடிகள் 1800 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாடு என்று பெயர் சூட்டி விட்டார்.

கண்ணகிக்குச் சிலை எடுக்கக் கல் கொணர்வதற்காக இமயமலை செல்வது குறித்துக் கலந்து பேசும் போது, அமைச்சன் வில்லவன் கோதை செங்குட்டுவனைப் பார்த்து, "ஒலிக்கின்ற கடலை எல்லையாகக் கொண்ட தமிழ் நாட்டை உருவாக்க விரும்பும் நீ, கல் கொணரப் போனால் எதிர்ப்பவர் எவரும் இரார்" என்று கூறுகிறான்.

*"இமிழ் கடல் வேலியைத் தமிழ் நாடாக்கிய*
*இதுநீ கருதினை யாயின் ஏற்பவர்*
*முதுநீ ருலகில் முழுவதும் இல்லை"*

சீதை, திரௌபதி என்று வடபுலத்துப் பெண் கதைமாந்தர்கள் மட்டுமே தமிழ் மக்களிடையே பெருமளவில் பரவியுள்ள சூழலில் ஒரு தமிழ்ப் பெண் - நடந்த கதையை வைத்து எழுதப்பட்ட காவியத்தின் நாயகி - கண்ணகி பெயர் இங்கு பரவுவது பெண்ணுரிமைப் போருக்கு இடையூறு ஆகி விடாது. சீதையைப் போல் கண்ணகி கடவுள் அவதாரம் அல்ல; மண்ணின் மகள். அவளை விமர்சிக்கலாம்; பாராட்டலாம்; எல்லா உரிமையும் நமக்குண்டு. தந்தை பெரியார் கண்ணகியை எதிர்த்தார் என்று சிலர் கூறுகிறார்கள். தமிழினத்தின் விடுதலைக்காக பாடுபட்ட அவர் பல அதிர்ச்சி வைத்தியங்கள் செய்தார். பழைமையே உயர்வானது, எல்லாம் பழைமையில் இருக்கின்றது என்று பிற்போக்குத்தனமாக உரத்துப் பேசப்பட்ட காலத்தில் விடுதலைச் சிந்தனையாளரான பெரியார் இவ்வாறான அதிர்ச்சி வைத்தியங்களைச் செய்தார். இந்த விமர்சனங்களை, ஓர் இனத்தின் மரபு வளத்தை அளந்து பார்ப்பதற்கான கோட்பாடாகக் கொள்ள வேண்டியதில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட சில அம்சங்களுக்கு மட்டும் தங்களுக்கு வசதியாகப் பெரியாரை மேற்கோள் காட்டுவோர் பெரியாரது இன விடுதலைப் பார்வை கொண்டோர் அல்லர் என்பதையும் கவனிக்க வேண்டும். 1968ஆம் ஆண்டு கண்ணகி சிலையை அண்ணா நிறுவிய போது பெரியார் எதிர்க்கவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும்.

பழைய இலக்கியங்களை, கதைமாந்தர்களை, பழைய வரலாற்றை முற்றாகக் கைகழுவி விட்டால் ஓர் இனம் தனது வேரைத் தானே அறுத்துக் கொள்வதாகப் பொருள்.

தந்தை குடிகாரர்; ஒழுக்கக் குறைவானவர். தாயோ அவரைச் சகித்துக் கொண்டு குடும்பம் நடத்திப் பிள்ளைகளை வளர்த்தாள். தாயின் மறைவுக்குப் பிறகு, அவளது படத்தை மகன், வீட்டில் மாட்டி வைக்கிறான். பேரன் வந்து, இது பெண்ணடிமைச் சின்னம் என்று கூறி பாட்டியின் படத்தை அகற்ற வேண்டும் என்று கூறினால் அந்தப் பேரனின் விருப்பத்தைத் தந்தை ஏற்றுக்கொள்வாரா?

நாமும் கண்ணகி சிலையை அகற்றப்பட்டதை ஏற்றுக் கொள்ளக் கூடாது. அதே இடத்தில் மீண்டும் அச்சிலையை வைக்கும்படி ஆட்சியாளர்களை வலியுறுத்த வேண்டும். ▣


**படிப்பதற்கொரு பரிந்துரை**

- *கருத்தியல்*: மதம், சாதி, பெண்.

*நூலாசிரியர்*: இராசேந்திர சோழன்
விலை: ரூ.80/-
பக்கம்: 256




படிப்பகம்

www.padippakam.com

## ஓர் 'அழகி'ய...

[20ஆம் பக்கத் தொடர்ச்சி]

சண்முகத்தின் மகன் கணக்குத் தேர்வுக்காக எண் வாய்ப்பாட்டை ஆங்கிலத்தில் மனனம் செய்து கொண்டிருக்க, சண்முகத்தின் எண்ணம் தொடக்கப் பள்ளிக்குச் செல்கிறது. மரத்தில் தொங்கும் பலாவைக் காட்டி பள்ளிக்குள் நுழைவது மண்ணின் அடையாளத்தைக் காட்டும் நல்ல குறியீடு! பள்ளியில் சண்முகமும் குணசேகரனும் மற்ற மாணவர்களும் செய்யும் கலாட்டக்கள், அடிக்கும் கூத்துகள், ஆசிரியர்களைச் செய்யும் நையாண்டிகள், உடன்படிக்கும் மாணவர்கள் ஒருவரை ஒருவர் செய்து கொள்ளும் கிண்டல் எல்லாமே பார்வையாளர்களைக் காட்சியோடு ஒன்றச் செய்கின்றன. இந்தப் பின்னணியிலேயே அந்தச் சமூகத்தின் வறுமையையும் பள்ளிகளின் அவல நிலையையும் ஆசிரியர்களின் அறிவு வறுமையையும் பதிவு செய்யத் தவறவில்லை தங்கர் பச்சான். வயல்வெளிகளிலும் வீடுகளிலும் வேலை செய்து கொண்டே கல்வி பயில வேண்டிய மாணவர்களின் நிலை நமக்குப் பதியாமல் போகாது. ஆனால் இவ்வளவு ஏழ்மையில் சிறுவர்களின் முகத்தில் ததும்பும் குறும்பும் புன்னகையும் அவ்வளவு இயல்பான அழகு! தனலெட்சுமியின் காதுகளில் கடலையைத் தொங்க விடுவது, குறட்டை விட்டுத் தூங்கும் காவல்காரரின் வாயில் கடலையைப் போடுவது எனச் சிறுவர்கள் செய்யும் கலாட்டாக்களில் என்ன ஓர் எதார்த்தம்! அந்த மண்ணோடு மண்ணாய் வாழ்ந்து அதன் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நேரில் அனுபவித்துச் சுவைத்த ஒருவரால்தான் இந்த அளவுக்கு எதார்த்தமாகக் காட்சிகளை அமைக்க முடியும்! இப்படிப்பட்ட எதார்த்தமான இயல்பான காட்சியமைப்புகளே படம் முழுவதையும் நிரப்புகின்றன! இதுவே படத்தின் வெற்றிக்கு அடிப்படையும் கூட!

தனலெட்சுமி தோழியின் தோளில் கைபோட்டுக் கொண்டு மண்ணுருண்டைகளை உருட்டிக் கொண்டு வருவது, சண்முகம் தூங்குவது போல் நடித்துக் கொண்டே தனலெட்சுமி தன்னைப் பற்றி அம்மாவிடம் ஏதும் பேசுகிறாளா எனக் கேட்கப் பார்ப்பது, கணக்கு ஆசிரியர் மாணவர்களிடம் அல்ஜீப்ரா சூத்திரங்களைக் குடைந்து குடைந்து கேட்பது. இப்படிப் படத்தின் எதார்த்தக் காட்சிகளுக்குச் சான்றுகளை அடுக்கிச் செல்லலாம்!

தனலெட்சுமியின் மகன் வகுப்பில் சேரும் முதல் நாளன்று இனிப்புகளை வழங்கும் போது... இளம் வயது தனலெட்சுமி வகுப்பில் சேரும் முதல் நாள் இனிப்பு வழங்கும் அந்த நிகழ்ச்சியை 'பிளாஷ்-பேக்' உத்தியையோ பின்னணிக் குரல் உத்தியையோ பயன்படுத்தாமல் நந்திதாதாஸ் (தனலெட்சுமி) ஆர். பார்த்திபன் (சண்முகம்) ஆகியோரின் முக உணர்ச்சிகளிலேயே குறிப்பாய் உணர்த்தி விடும் பச்சானின் திரையறிவு நம்மை வியக்க வைக்கிறது!

அதே வேளையில், தன் கிராமத்துக்குத் திரும்பும் சண்முகம் தனலெட்சுமியின் வீட்டில் பல காலம் முன்பு ஒட்டப்பட்ட *அன்னக்கிளி* சுவரொட்டியைக் கண்டவுடனேயே, அதற்கான பழைய தொடர்பைக் கூர்மையான பார்வையாளர் எவரும் எளிதில் புரிந்து கொள்வர். ஆனால் அதனைக் கதாநாயகன் குரல் கொண்டு விளக்க முயன்றிருக்க வேண்டியதில்லை.

கிராமத்தின் பட்டிதொட்டிகளைக் காட்டும் போதும், சென்னைச் சேரிகளைக் காட்டும் போதும் இயக்குநரின் சமூக உணர்வு வெளிப்படுகிறது.

தனலெட்சுமி தன் மகனோடு படும் துயரங்கள், அதைச் சொல்லும் ஒவ்வொரு காட்சியமைப்புமே காண்போர் மனத்தைக் கரையச் செய்கிறது.

இளமையில் நல்வாழ்வு வாழ்ந்த தனலெட்சுமி முதுமையில் கைம்பெண்ணாக ஒரு மகனுடன் நடைபாதைக் குடிசையில் குடும்பம் நடத்துவது, தன் காதலியின் கொடிய வறுமையைக் கண்டு சண்முகம் மனமுடைந்து போவது, கூரையிலா வீடுகளில் மழை பெய்ய, ஒண்ட இடமிலாத ஏழைகள் ஒதுங்க இடம்பிடிக்க முண்டியடித்து ஓடுவது, 'உன் குத்தமா என் குத்தமா' என்ற சோகப் பாட்டில் காட்சியின் துயரத்தை எல்லாம் பிழிந்து கொடுக்கும் இளையராசாவின் இசை என எல்லாம் சேர்ந்து கல் மனத்தையும் உருக வைக்கும் என்பதில் அய்யமில்லை!

பணக்காரர் வீட்டில் வேலை செய்யும் தனலெட்சுமியின் நிலைமை சேரி வாழ்க்கையை விட மோசமாக இருப்பதை, அவர் தன்மானம் சிதைக்கப்படும் கொடுமையைத் தோலுரித்துக் காட்டுகிறார் இயக்குநர்.

விருந்தினர்களுக்கு உணவு பரிமாறும் போதே உணவு கேட்டு அவசரப்படும் மகனுக்கு யாருக்கும் தெரியாமல் புறக்கடையில் உணவூட்டும் போது, அந்த உணவு தனலெட்சுமியின் மகன் கைகளில் இருந்து பிடுங்கப்படுவதும், அதனால் அவள் தன்மானம் சிதைக்கப்பட்ட நிலையில் தன் மகனுக்கு ஆறுதல் சொல்வதும், காதலியின் இந்நிலை கண்டு சண்முகம் நொறுங்கிப் போவதும் படம் காணும் எவர் கண்ணையும் கலங்கடிக்கச் செய்கிற சோகக் காட்சி! தனலெட்சுமிக்குக் காதலன் வீட்டிலேயே கூட இழிவு ஏற்படும் காட்சிகள் ஏழ்மையை மிதித்துச் சிரிக்கும் பணச் சமூகத்தின் இழிபண்பாட்டை எடுத்துக்காட்டுகின்றன.

அழகியாக நடித்துள்ள நந்திதாதாஸ் வறுமையின் பல கொடிய பரிமாணங்களையும் தன் தரமான நடிப்பால் வெளிக்கொணர்ந்துள்ளார்.

தன் பழைய காதலியை நெஞ்சில் சுமந்து கொண்டிருந்தாலும் மனைவிக்கு எந்தத் துரோகமும் செய்து விடக் கூடாது எனும் உயர்ந்த மனித எண்ணத்துடன் வாழும் பாத்திரத்துக்குப் பார்த்திபன் வெகு பொருத்தம்! கொஞ்சம் தவறினாலும் ஆணாதிக்கக் கருத்தியல் தொற்றிக் கொள்ளக் கூடிய அப்பாத்திரத்தைத் துளியும் பெண் விடுதலைக் கருத்தியல் கூறு குன்றாமல் படமாக்கியுள்ளனர்.

'அழகி'யிலும் பின்னணி இசையில் வெற்றிக்கொடி நாட்டியுள்ளார் இளையராசா. பல காட்சிகளுக்கு உண்மையில் உயிரூட்டியுள்ளார். கோயிலில் பூசாரியிடம் தனலெட்சுமி தன் குழந்தையைக் கொடுக்கும் காட்சிப் பின்னணியில் ஒலிக்கும் நாட்டுப்புறப் பாட்டு பொருத்தம்! சண்முகத்தின் படுக்கையறையில் அவன் திருமண ஒளிப்படத்தைத் தனலெட்சுமி காணும் போது நம் நெஞ்சை வருடித் தொடங்கும் பின்னணி இசை அடுத்த ஐந்து நிமிட விறுவிறுப்புக்கும் உயிரூட்டுகிறது! உண்மையில் அந்த இசை இல்லாமல் இயக்குநரால் காட்சியை அவ்வளவு விறுவிறுப்பாக எடுத்திருக்கவே முடியாது.

படத்தின் எதார்த்தத்தைக் கண் முன் கொண்டு வந்து நிறுத்தியதில் தங்கர் பச்சானின் ஒளியோவித்துக்குள்ள பங்கு கிஞ்சிற்றும் குறைந்ததல்ல!

திரைக்கதை அமைப்பதில் இடைவேளைக்கு முன்பு எடுத்துக் கொள்ளப்பட்ட அக்கறை அதன் பின்பு ஏனோ எடுத்துக் கொள்ளப்படவில்லை. எனவே இடைவேளைக்கு முன்புள்ள விறுவிறுப்பு பின்னர் குன்றிப் போகிறது. அங்கங்கே துண்டுதுண்டாகப் படத்துக்குப் பொருத்தமில்லாமல் வரும் விவேக்கின் நகைச்சுவைக் காட்சிகள் படத்தின் இயல்பான ஓட்டத்தைக் குறைக்கவே பயன்பட்டுள்ளன. எந்தத் தேவையுமில்லாமல் செருகப்பட்டுள்ள ஆபாசக் கூத்து கண்டிப்பாகத் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். அனேகமாய் வணிகக் கட்டாயங்கள் காரணமாக இருந்திருக்க வேண்டும். எது காரணம் என்பதைத் தங்கர் பச்சானின் வருங்காலப் படங்களே விடையளிக்க முடியும்.

திரைப்படத் திறனாய்வு : **தலைக்கின்னி.**



படிப்பகம்

www.padippakam.com

# "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!"

## கொள்கைத் தமிழர்களின் கூடல் மாநாடு

## மதுரை 17.03.2002

# தமிழ்த் தேசிய முன்னணி தொடக்க மாநாடு

**தியாகி சங்கரலிங்கனார் அரங்கம், மதுரை**

**[தாய் மூகாம்பிகை திருமண மண்டபம்
(மாப்பிள்ளை விநாயகர் திரையரங்கு அருகில்),
தேனி சாலை, மதுரை.]**

**2002 மார்ச்சு 17 ஞாயிறு
காலை 9 முதல் இரவு 9 வரை**



படிப்பகம்

www.padippakam.com


























## *வாங்கி விட்டீர்களா ?

**தமிழ்த் தேசிய முன்னணியின் காலங்காட்டி.** இது வெறும் நாட்காட்டி மட்டுமன்று. தமிழ்த் தேசத்தின் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் கண் முன்நிறுத்தி வருங்காலத்துக்கு வழிகாட்டும் காலங்காட்டி!

திங்கள் தோறும் தேச வரலாற்றின் நிகழ்வுகளைக் காட்டும் வண்ணப் படங்கள்! வரலாற்று முத்திரை பதித்த சிறப்பு நாட்கள் பற்றிய குறிப்புகள், இத்தனைக்கும் விலை **இருபது ரூபாய்** மட்டுமே. பத்துக்கும் குறையாமல் வாங்கினால் விற்பனைக் கழிவு உண்டு. தேவையுள்ளோர் தமிழ்த் தேச முகவரிக்கு எழுதுங்கள்.

படிப்பகம்